ப்ரஹ்மவித்யா

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ் மீ ௯௰௨ தேதி சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம்—௧] ௧௮௮௭ ௵ ஏப்பிரல் ௴ ௯௰௨ [இலக்கம். ௰௧

விஷயா:	பத்ரஸங்க்யா
உபந்யாஸ: [அநுவ்ருத்த:]	௱௬௧
வைகாநஸோக்தி.	௱௬௪
பாஷோத்பத்திப்ரஸங்க: [அநுவ்ருத்த:]	௱௬௮
குதர்க்காசலகுலிசோத்தரம்.	௱௭௧
வந்தநா:	௱௭௩
மதஸ்ய ப்ரயோஜநம் ததாசார்யஸ்ச [அநுவ்ருத்த:]	,,
"தர்மம் கரோது பக்ஷீ" ப்ருச்சதி.	,,
வைராக்யம்.	௱௭௫

விஷயம்	பக்கம்
உபந்நியாசம். முன்தொடர்ச்சி.	௱௬௧
வைகாநசருக்குச்சித்தாந்திகூறும்விடை.	௱௬௫
பாஷோத்பத்திப்பிரசங்கம். தொடர்ச்சி.	௱௬௭
குதர்க்காசலகுலிசத்திற்குவிடை.	௱௭௰
ஸ்ரீமத், ப்ரம்மவித்தியாபத்திராதிபர் அவர்களுக்குவந்தனம்.	௱௭௨
தர்மங்கரோதுபக்ஷி கேட்கும்வினா.	௱௭௩
மதமும், அதின்பிரயோசனமும், அதின் ஆசிரியரும். தொடர்ச்சி	,,
வைராக்கியம்.	௱௭௫

ரி பு கி னை த.

இப்புத்தகம் சென்னை பெத்து நாயக்கன்பேட்டை ஏகவல்லியம்மன் வீதி, மேலண்டைவாடை 6. நெ. வீட்டில் அத்வைத விவேகசமாஜத்தி லொருவரான தி. ரே. திருவேங்கடபிள்ளை யவர்களிடம் ரூபா 2௳ விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தா விவரம்

	இந்தியாவிற்கு				இலங்கைக்கு		
௵ 1	ரூ 1	12	0		2	4	0
மா 6.	ரூ 1	0	0		1	4	0
மீ 3.	ரூ 0	9	0		0	10	0
காபி 1	ரூ 0	3	6		0	4	0

இஃது சிதம்பரம், ப்ரம்மவித்தியா ப்ரெஸ் தலைவரால் பதிப்பித்து வெளிப்படுத்தப்பட்டது

ஐம்பதாம் ஆண்டான் பத்திரிகை 35 வது பக்கத்தில்ப்ரம்மவித்தியா பத்திராதிபரைவேண்டுவதாவது எனனும் மகுடத்தின் கீழ், ஸ்ரீதரன் எனக்கையொப்பமிட்டு ஓர்சிருநண்பர் கேட்டிருக்கும் கேள்விக்கு விடை.

தமது பத்திரிகையில் 139. வது பக்கத்தில் சுரேசுவராசாரிய சரித்திரத்தில் "விசுவரூபனும், சரசவாணியும் விவாகம் செய்துகொள்ளப் பரஸ்பரம் மோகங்கொண்டு மனமுருகினின்றார்" என்று எழுதியிருப்பதைக்கண்டு நமது நண்பர் ஸ்ரீதரர் எடுத்த ஆக்ஷேபம் யாதெனில், அப்பெண் விவாகத்திற்குமுன்னரே புத்தியறிந்தவளாதலால், [ப்ரௌடையானவள் என்று விளங்குவதால்] இவ்விதவிவாகம் அந்தணர்களில்சாத்திரோக்தமாகுமா?என்பது. இவ்விடத்தில் தாமெழுதியதுகொண்டு அக்காலத்தில் அம்மங்கைமணியின் கல்விப்பயிற்சியும் மதிநுட்பமும் அதிகமாயிருந்ததாயுமட்டுமே வெளியாகிறதேயன்றி, நமது ஸ்ரீதரர் குறிக்கும் வண்ணம் விவாகத்தின் வரைகடந்ததாய் அவ்வாக்கியம் எவ்விதம் பொருள் கொடுக்கும்? அவ்வித எண்ணமே யௌவனத்தாலின்றியமையாதெனின், உலகில் யௌவனமுள்ளவிடமவ்விதப்பகுத்தறிவின்மையையும், அஃதில்லாவிடம் பகுத்தறிவுண்மையையும் யாம் காண்பதரிதேனும், முற்கூறிய சரசவாணியென்னும் பெண்ணினிடம் அபூர்வமாய்ப்பகுத்தறிவு வாலிபத்திலேயே உண்டாயிருந்தது கொண்டே அவள் சரஸ்வதியின் அவதாரமென்று பலர் கொண்டாடப்பதம்பெற்றுளாதலால், இவ்விதம் ஓர் சரித்திரத்தை மாத்திரம் பார்த்து சாஸ்திரவிருத்தமான இவ்விவாகத்தை ஊகிப்பது முற்றிலும் ஒவ்வாது.

ஓர் தமிழன்

வெங்கட்டரமணதாஸரவர்களுக்கு ஓர் கேள்வி.

பாஞ்சராத்திரமதத்திற் பிறந்து இப்போது சைவசமய நடையைத்தழுவிய ம. ஈ. ஈ ஸ்ரீ வெங்கட்டரமணதாஸரவர்களே! யான் கேட்குங் கேள்விகளுக்குக் கோபமில்லாமல் தகுந்த பிரமாணத்தோடும் பதில் சொல்லுவீர்களெனத் தங்களை வந்தனஞ்செய்து கேட்கின்றேன். கருவூர் ஆத்துமநாதன் வைணவாத்வைதி.

ஐயா!— சிலநாளைக்குமுன் தங்களுக்கும் ஓர் உத்தியோகஸ்தருக்கும் திருநீறுவிஷயமாய்ச் சம்பாஷணை நடந்ததில் அவருக்குவிடை கூறுதுவர்த்து, சென்னை ஸ்ரீ சுதேசாபிமானியில் வெளியிட்டது யாதெனில், 'நீறு செவ்வேயிடக்காணில் நெடுமாலடியாரென்றோடும்', என்று ஆழ்வாராதிகள் பிரபந்தத்திற் சொன்ன சுலோகம் பஸ்மமென்றே அதின் அர்த்தமாதலால் பஸ்மந்தரித்தேன். ஓர் உத்தியோகஸ்தர் நீர் வைணவராயிருந்தும் திருநீறுதரிக்கலாமோவெனக்கேட்டார் அவ்விடஞ்சொன்னேன் சினப்பரென்று, கலக்கமடைந்த வைதிக சிலரைச்சந்தோஷிப்பிக்கின்றேனென்று தாங்கள் கூறியது யாதெனில், பஸ்மந்தரிப்பதுவே உசிதமென்று ஆழ்வாராதிகள் சாதித்தபிரபந்தத்திலிருக்கின்றது. ஸ்ரீபெரும்பூதூரரென்னும் பாபாத்மா பாஷண்ட மதோத்தாரணஞ்செய்து வெள்ளைமண் மஞ்சட்பொடிவைக்கும்படி செய்தனரென்றுகூறினீர். அதைப்பார்த்த தன்மை விரும்பியென்னும் ஓர் வைணவர் தாங்கள்தரித்தடஸ் மதத்தையும்பலவாறுநிந்தித்திருக்கின்றீரென்றீர். அதற்காகக்குதர்க்காசலகுலிச மொன்று எழுதி நிவர்த்திசெய்துகொண்டீர். குதர்க்காசலகுலிசத்தைக்கண்ட வைணவர் உண்மையான சங்கதிகளைக்கொண்டேவிடைகொடுத்தார். விடைகொடுத்த வைணவருக்கு விடைக்குமேல்விடையொன்று சொன்னதில், அவர் பச்சைப்பசும்பொய்யைசொன்னாரென்றுஞ்சொன்னீர். தாங்களும் பாஞ்சராத்திரமதத்திற் பிறந்தவரென்றும். சைவசமயத்திற்றான்முத்தியடையவேண்டுமென்றுஞ்சொன்னீர். இதுநிற்கத்தாங்கள் வெளியிடவேண்டிய முக்கியப்பிரமாணம் யாதெனில்;

1. வது பிரமாணமாக அத்வைதசாஸ்திரத்திலாவது, பிரபந்தத்திலாவது, ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் பரத்துவமாய்க்கூறும் உபநிடதத்திலாவது வெளியிடவேண்டியது

2. வது ஸ்ரீ பெரும்பூதூரரென்னும் ராமாநுஜாசாரியர்பாபாத்மாவென்பது பிரமாணத்தோடும்வெளியிடவேண்டியது.

3. வது திருமண் ஸ்ரீசூர்ணந்தரிப்பது பாஷண்ட மதமென்பதற்குப் பிரபந்தத்திலாவது அத்வைத சாஸ்திரத்திலாவது, உபநிடதத்திலாவது உள்ளபடி வெளியிடவேண்டியது. அல்லது பாஷண்டர்களினுரென்றும் வெளியிடவேண்டியது.

4. வது நீர் கூறும் பஸ்மஜாபாலம், பிரஹஜ்ஜாபாலம், காலாக்கினிருத்திரம்முதலிய உபநிடதமெல்லாம் ஸ்ரீசிவபெருமானைப் பரதத்துவமாய்க்கூறும் உபநிடதமெனப் ப்ரம்மவித்தையிற்கூறுவதால் ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் பரதத்துவமாய்க்கூறும் உபநிடதத்திலெடுத்தே வெளியிடவேண்டியது.

கருவூர் ஆத்துமநாதன்.

நாம்வசிப்பது நத்தம்; முன்பு இருந்தது கருவூர்.

கிறிஸ்துமத கண்டனம்

இன்று நம்கையேறிய ப்ரம்மவித்தியா பத்திரிகையில்கிறிஸ்துமதவாதம் பேசியிருக்கிறதை இஷ்டர்கள்மறந்துபோகக்காலம் நேர்ந்தவில்லை. இஷ்டர்களே! குலமக்களே! கிறிஸ்துமதம் ஒருமதமென்று நாம் சட்டையுடன் பேசநியாயமில்லையே. அந்தவேதம் அத்தனையும் நாம் ஒருமுறைக்கு ஒன்பதுமுறைபடித்தோம். அருமையான நீதிமொழிகள் உண்டு. மற்றப்படி நாம் முத்தியடையும் வழி அதிலின்லை. பின்னும் அதில் "ஆதியிலே வாக்கிருந்தது; அவ்வாக்குத்தேவனிடத்திருந்தது; அவர் வாக்கே தேவன்" என்னும்மொழிசில உண்டு. அது பிரணவத்தைச்சுட்டுகின்றது. கிறிஸ்துமதத்தில் தெரிந்த மூதறிஞர்கள் முன்னே இருந்திருந்தும் அவர்களுக்குத் தத்துவவிசாரணை யில்லாமையால், அறிவிற்றோன்றியவைகளை அனர்த்தஞ்செய்து அயற்சார்பாக எழுதினார்கள். அது அவர்கள் குற்றமல்ல. தத்துவத்தை அவர்கள்வேதம் தினைமும் குறிக்கவுமில்லை; தொட்டுக்காட்டவுமில்லை. சாக்கிரத்திலும், சொற்பனத்திலும், சுழுத்தியிலும் இருக்கும் தத்துவம் இன்னதென்று அவர்களுக்குத்தெரியாது. சாக்கிரம் இன்னமயமென்று அறியாதபாவி எவனும் ப்ரம்மத்தைக்கண்டு, அதுதானாக ஆவது சாத்தியமல்லவே. நம் பாரதம் கேடுகெட்டபுராணமென்று எண்ணி, அதிலுள்ள அகாதமானகாரியங்களைத்தொட்டுப்பேசி க்கேலிபண்ணுவார்கள். பாரதத்திற்கு அர்த்தங்கள் இரண்டென்று அவர்கள் அறியார்கள். பஞ்சபாண்டவர்களை

[illegible]

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ்மீ ௩௰௨ சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்

புஸ்தகம்—௧] ௧௮௮௭ ஹ் ஏப்ரல் மீ ௩௰௨ [இலக்கம். ௰௧

[illegible]

[illegible]

உபந்நியாசம்.

[முன்தொடர்ச்சி.]

முதற்காலத்து ஆரியர்களும மற்றவர்களும் வேறுபட்டகாரணம் மந்திரப்பிராமணங்களில் நன்குவிளங்கும். பயிர்தொழில், கால்நடைகாத்தல் முதலிய தொழில்களே ஆதியில் எல்லோரும் கைக்கொண்டது. அதுகொண்டே வைசியர் என்னும் மூன்றும்வருணத்தவருக்கு ப்பெயரான [விஶஃ] என்குறபதம் மனிதர்கள் அனைவருக்கும் பொதுப்பெயராகவும் வழங்கிவருகின்றது. பின்னற், காலஞ்செல்லஇவர்களுக்கு த்தொழில்விஷயத்தில்வந்த ஓர்கலகத்தினல், அவர்களை சமாதானப்படுத்த எத்தனம்செய்தசிலபலசாலிகள், முன் தாம்கொண்ட தொழிலைவிட்டு வேறுபட்டுசண்டைக்காரத்தொழிலைக் கொண்டனர். அவர்களுட்சிறந்தவரே வேதங்களில் அரசரெனப்படுவர். இதுகொண்டே [விஶாம்பதிஃ] என்று அரசர்களை வழங்குவது. காலஞ்சென்ற பார்சீபாஷையில் "விஸ்பதி" என்றும் இக்காலத்து லாட்டின்பாஷையில் "வெஸ்திஸ" என்றும். இதேபதம் அரசர்களைக்குறிக்கும்தன்மையுளதாயிருக்கின்றது. இவ்விதம் க்ஷத்திரியரும்வேறுபட்டபிறகு, தேவதாபாதத்தால் உலகத்தில்மழை முதலியவை சரியாய்ப்பெய்யாமல் போனபொழுது, அத்தேவதைகளைப் பூசிக்கவேண்டியது அவசியமாயிற்று. இவ்விந்துதேசம்போல் மற்றுள்ள எந்ததேசத்திலும் இவ்விதம் தேவதாபக்திவிசுவாசங்கள் கிடைப்பதரிது. ஆரோக்கியம், ஐசுவரியம், புத்திரன், மித்திரன், பசுக்கள் முதலிய எல்லாவிஷயங்களும் தேவதாப்பிரசாதத்தால் கிடைப்பதாய் மது இருடிகளுக்கு நம்பிக்கையுண்டு. இதுவிஷயம் அனேகத்தைப்பிரார்த்திப்பதில் விநியோகிக்கப்படும் வேதமந்திரங்களால் ஊகிக்கலாம். தேவதைகளின் பிரசாதத்தாலன்றி சத்துருஜயமில்லை. அப்பிரசாதத்தாலே தான் பயிர்விருத்தி. எல்லாம் தேவதாகிருபையால்முடியும். அத்தேவதைகளைப் பிரார்த்தித்தால் அவர்கள்சகாயம் செய்வாரென்பது அவரது கருத்து. இது, வேதங்களில்விளங்கும் "[illegible]" இதுபோன்றமந்திரங்களால் ரிஷிகளின் கருத்துவிளங்கும் இவ்விதஅபிப்பிராயம் எங்கும் பரவுதற்கு முன்னமே வேதங்களைக்கற்றபுரோகிதர்கள்

[illegible]

வைசியர், க்ஷத்திரியர் இவர்களுக்கு மேலான பதவியை யடைந்தனர். இவர்களும் தன் சுயப்பிரயோசனத்தை நாடி எல்லோருக்கும் விருத்தமான சங்கதிகளை நடத்திவந்தார்கள். தேவதைகளின் சாந்நியத்தியத்தைப்பெறுவார்கள். அடிக்கடி தாயிடம் பிள்ளைபோல் அத்தேவதைகளிடம் சேருவார்களென்பது எல்லாமதங்களின் உட்கருத்து. இப்பேர்க்கொற்ற புரோகிதர்கள் தேவதாபூசை முதலிய சங்கதிகளின் தன் சொந்தப்பிரயோசனத்தையே எதிர்பார்த்தார்கள். அரசர்களுக்கும் வேதங்களைக் கற்ற புரோகிதர்களின்கிருபையால்தக்க மேன்மையுண்டென்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. "[illegible]" மந்திரத்தைப்பார்க்க!! புரோகிதப்பிராமணர்களுக்கு ப்பெருமை வேதமந்திரங்கள் வெளிப்படுவதற்குமுன்னே உள்ளதென்றே தோன்றுகின்றது. தமக்குப்பெரும்புகழைவிளவிக்கும் இம்மந்திரங்களை அவர்களே வெகுகாலமாய்க் காப்பாற்றிவந்தார்கள். புரோகிதர்கள் செய்த தேவதாபூசையால் அரசர்கள்யுத்தங்களில் ஜயமடைந்தசங்கதி வேதத்தில் பலவிடங்களிலுண்டு. [illegible]" "[illegible]" இம்மந்திரங்களில் வெளியாகும். இம்மந்திரங்கள் ஜயமுதலியவற்றைக் கொடுப்பன. அவைகளை வேறொருவர்சொல்லக்கூடாது. அவைகளை ஏதோஒருசுரம்தவறிச்சொன்னாலும் தேவதைகளுக்குக் கோபமுண்டாகுமென்பதும் எல்லோரும் நம்பும்படி அவரே செய்தனர். இவ்விதம் இவர்கள் ஜனங்களுக்குப் போதகாசாரியரும் யாகம்முதலிய கருமங்களை முடித்துவருபவரும், அரசர்களுக்கும் நீதிசொல்லிவைக்கும் மந்திரிகளும் ஆயினார்கள். அல்பஞ்ஞானமுள்ள சில ஜனங்கள் இவர்கள் நிக்கிரகம், அனுக்கிரகம் இவற்றிற்கு சக்தரெனவும் நம்பினார்கள். முற்காலத்துப்புரோகிதர்கள் அனுக்கிரகம்செய்வது போல் நிக்கிரகம் என்கிற சாபத்தையும்செய்ததாய் மந்திரங்களில்தானே தெரியவருகிறது. "[illegible]",, என்கிற மந்திரத்தைக்காண்க; இந்தப் புரோகிதாசாரியர்கள் அரசாங்கத்தைச்சேர்ந்தவேலைகளில்விருப்பமற்றவர்களாயிருந்தார்கள் [illegible]" என்கிறசதபதப்பிராமணமந்திரத்தில்காண்க: ராசாங்கத்தை

[illegible]

ச்சேர்ந்த ஒவ்வொருசங்கதியும், அவரவர் ராஜாக்களிடம் தெரிவிக்கப்பட்டது. தமக்குச்சொந்தமான புரோகிதாதிகாரத்தை இவர்கள் கிரமமாய்க்காப்பாற்றி வந்தனர். அரசர்கள் வணங்கும் பெரும்பதம் பிராமணர்களுக்கிருந்தமையால், அவர்களுக்கும் இவர்களுக்கும் விரோதமுண்டாயிருந்தது. சிலஅரசர்களும் ரிஷியாய் மந்திர ரிஷிகளானார்கள். அவர்களைராஜ ரிஷிகளென்று சொல்வது வழக்கம். க்ஷத்திரியராய்ப்பிறந்தும், க்ஷத்திரியின்ரிஷியாய், வசிட்டருடன் எதிர்வண்டையிட்டு, தவத்தால் ப்ரம்மரிஷி எனப்பெயர்பெற்று, ப்பெருந்தவத்தினரான பிருகுகுலத்தார் தம்மில் ஒருவராய் ஒப்பத்தக்க பெருமையை விசுவாமித்திரர் பெற்றனர். விதேக ராஜனும் சிலபிராமணர்களைக்காட்டிலும் மேலானவராய், யாஞ்ஞவல்கிய முனிவரிடம் வேதாந்த சித்தாந்தத்தை அறிந்து அவருக்கு "எனது ராச்சியமல்லது என்னுயிரையேனும் தக்ஷிணையாகக் கொடுப்பேன்" என்றுரைத்ததாகவும் வேதங்களில்காணலாம். அடிக்கடி பிராமணர்கள் பெருமையடைந்து தமது அதிகாரத்தை கிரமமாகக்காப்பாற்றிவந்தார்கள். பிறகு, தம்முடைய அதிகாரம் அதிகப்படவேண்டி மற்றவர் அதிகாரத்தைக் குறைக்க எத்தனம் செய்தார்கள். இவர்கள்சொல்லியபடி எவரேனும் அனுஷ்டிக்காவிடில், அவர்களை வைதிகசம்ஸ்காரமில்லாத விராத்தியரென தள்ளிவைத்தார்கள். இவர்கள் ஆரியமென்னும் முக்குலத்தார் பாஷையையே பேசிவந்தார்கள். ஆனால், இவர்கள் விருத்தமாத்திரம், பிராமணர் கட்டில்கொண்டதல்ல. விராத்தியர்களும் திரும்பவும்பிராமணனாகவிரும்புவரேல், அவர்களுக்கு பிராயச்சித்தஞ்செய்து திருப்பியும் வந்தார்கள். ஆரியரென்னும் முக்குலத்தவரில் வேறானமனிதர்கள் சூத்திரரென, ப்பிராமணர்களுடன் சேர்ந்தவர்களால் வழங்கப்பட்டார்கள். "பிராமணர்களை எவர் அனுசரிக்கவில்லையோ அவர்கள் நான்குவர்ணங்களிலும்வேறானவர். தஸ்யு-என்று அவனை மனு அழைத்தார்." பிரம்மத்தின் முகம், தோள், தொடை, பாதம் இவ்விடங்களில்பிறந்த நான்குவருணங்களிலும்வேறாயுள்ளவர் எந்தபாஷையில் பயின்றவரானாலும் அவர் தஸ்யுக்களே. இவ்விதம் நம்மவர்ஏற்படுத்திய ஜாதிநியமம் வெகுகாலமாய் நிலைபெற்றது. வேதம், இதிஹாஸம், புராணம் இவற்றுள் ஆதிகாலத்திலிருந்த சாதாரணஜனங்களுக்கும் ஆரியர்களுக்கும் உண்டான மனஸ்தாபங்களுக்கு க்குறியுமிருக்கின்றது. ஆரியர்களிலும், பிராமணக்ஷத்திரியர்களில், ஒருவருக்கொருவர் அதிகமானவர்களென வெகுகலகங்கள் நடந்தன. வெகுகாலம் நான்காம் வருணத்தார் ஒழிய மற்றவர் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். இவர்கள்யாகம்முதலிய கருமங்களுக்குரியவராதலால், ஆரியர்என வழங்கப்பட்டார்கள். இம்மூவரும் இருபிறப்பாளரெனவும் சொல்வதுண்டு. புராணங்களின் பலவிடங்களில் சிருட்டிசொல்லுமிடத்து ஓரேவிதமனுஷியசிருஷ்டி தான்சொல்லப்பட்டது. அதுதொழில்வேறுபாட்டால்பேதத்தையடைந்தது, பிரகதாரண்யகோபனிடதத்திலிவ்விதம் சொல்லப்படுகிறது. வரும்

ஸ்ரீமது ப்ரம்மவித்தியாபத்திராதிபரவர்களுக்கு வந்தனம்.

ஐயா, வைகானசரவர்கள் குசர்க்காசல குலிசத்திற்கொழுதியவிடையினால்சிலருக்கு மயக்கமுண்டாகக் கூடுமாகையால் அதன் பரிகார நிமித்தம் அடியில் வருவனவற்றை எழுத அவசியமாயிற்று. இதனை நமது வைஷ்ணவநேயர் சற்றவர்களை வருத்தஞ்செய்ய எழுதியதாகக் கொள்ளாது, எமது விசேஷிப்பில் மூவிருந்துசுருதிக்கும் நியாயத்திற்கும் இணங்க்காட்டிவ

[illegible]

[illegible]

ரேல்அதனையுபகாரமாகவேர்போம்.

தங்கள் பத்திரிகையில் [பிப்ரவரிமீ 28 வ] "ஓர்வைசாநசர்" குதர்க்காசல குலிசத்திர்கு அறிவித்த விடையைப்பார்த்துயாம் சந்தோஷித்தோம். அதில் "லிங்கரூபிC என்று தொடங்கி எழுதிய வேத வாக்கியத்தில், விட்டுணுவான வர் கைகூப்பி ச்சிவனை வழிபடுகின்றார்என்று கூறப்பட்டிருக்கிறதேயன்றி, அவர்விபூ திருத்திராக்ஷங்களை த்தரித்த தாய் காணோம்; ஆகையால், குலிசக்காரர் விட்டுணுவுக்கு விபூதி தாரணத்தைக்கூறியது தவறு என்றார். விபூதி தாரண மின்றிச் சிவனை வணங்குவது கூடாதாகையால், சிவனை வழிபட்டவராகியவிட்டுணுவுக்குவிபூதிதாரணங்கேட்கப்பட வில்லை என்றது கூடாது. ஓர்கன்னிகை ஓர்வரனை மணந்தாள் என்று சொல்லுகையில், அவளுக்கும் வரனுக்கும் பாணிக்கிரகணத்தை நாம் ஒப்புகிறோம். இதனைக்கேட்ட மற்றொருவர் அவளுக்குத்திருமணங்கூறப்பட்டிருக்கின்றதேயன்றி அவள்வரனுடைய பாணிக்கிரகணஞ்செய்த தாய்க்காணோம். ஆகையால் பாணிக்கிரகணங்கூறியது தவறு என்று சொல்வாரெனின், நமது வைகாநசர்கூறியது சிறக்கும். அன்றியும், அரசன் கொலுவுக்கு வந்தானென்கையில் மந்திரிமுதலாயினரோடு அவன் முடிதரித்து ச்செங்கோல்தாங்கி வந்தானென்று சொல்லாததுஎன்னை; என்று உடாவுவதும் இதர்கொப்பாகும். விரித்து ச்சொல்வதுஞ்சில அவசரங்களிலுண்டு. விரித்துச்சொல்லாமையால் பிரத்யவாயமுமில்லை. இன்னும் பலதிருட்டாந்தவுண்மைகளால் சிவனைவழிபட்டவராகிய விட்டுணுவுக்கு விபூதி தாரணம் பசுமரத்தாணி யறைந்தாற்போல்நாட்டப்பட்டது. அந்த வேத வசனத்தில் யோகிகள், சித்தர்கள், தீக்ஷிதர்கள், வேதங்கள் உபநிஷத்துகள், இதிஹாஸங்கள், காசியில்மரண இச்சையுடையவர்கள், கணங்கள், பிரம்மா, விட்டுணு, இந்திரன், உருத்திரர், மஹரிஷிகள், சாம்பவர்கள், பாசுபதர்கள், மஹாசைவர்கள் என்னும் யாவருக்கும் சிவனைவழிபடுந்தன்மை கேட்கப்படுகின்றது. இதில் விட்டுணுவுக்கு ச்சிவோபாசனையைக்காட்டி எப்படி விபூதி தாரணத்தை விரித்துக்கூறவில்லையோ, அப்படியே பிரம்மா, இந்திரன், உருத்திரர் முதலினோர்க்கும் சிவோபாசனையைக்கூறி விபூதிதாரணத்தைவிரித்துக்கூறவில்லை. இதனால்இனிபிரம்மாதிகளுக்கும் விபூதியை நம்மவர் தோஷக்கூறுவார்போலும். விபூதிதாரணந்தோஷமாயின், பிரம்மாவுக்கு என்னபுண்டரம்? விட்டுணுவுக்கு என்னபுண்டரம்? இந்திரனுககுஎன்னபுண்டரம்? உருத்திரர்களுக்கு என்னபுண்டரம்? வேதவசனங்களால் வெளிப்படுத்தவேண்டியது. மேல்வசனத்தில் சிவோபாசகர்களாகிய கணங்களுக்கு விதித்தவிபூதியே அவர்களோடு சேர்த்துப்படித்த சிவோபாசகர்யாவர்க்கும் தாற்பர்யம் என்பது சித்தம். பிரம்மாவுக்கும், இந்திரனுக்கும் உருத்திரர்களுக்கும், ஏனையோர்க்கும் விபூதி தாரணங்கூறி, விட்டுணுவுக்குமாத்திரங்கூறாமல் விட்டிருந்தால், நம்மவர் வாதங்கொஞ்சம்பணம்பெறும். சிவனை உபாசியரும், விட்டுணு வாதிகளை உபாசகருமாகக்கூறியசுருதியில் வீண்வாதத்தை வைத்துக்கொண்டு விட்டுணுவுக்கு அதில் விபூதிகூறயில்லையென்று சந்தோஷிப்பது சந்தோஷமாகாது. விபூதி நீங்கலாக, தான் கூறும் வேறு எந்தப்புண்டரத்தையாவது வேதத்தில் பிரத்தியட்சமாகக்கண்டும், பிறர் ஒப்பக்காட்டியும் சந்தோஷிப்பதேசந்தோஷம். நம்மவர் சிற்பிகள் கல்லிலடிப்பதையும், படங்களிலெழுது வதையும்பிரமாணமாகக்காட்டினார். அது மூன்று ரேகைகளாகப் பாதத்தோடும், மொட்டையாயும்

[illegible]

இரண்டுவிதமாகஇப்போது உலகில் வழங்கப்பட்டு வருவதால் எதைநாம்கொள்ளுவதென்று தெரிவிக்கவில்லை. வெள்ளை சிவப்பு கலந்ததென்றும் நடுவில் சிவப்பில்லாத வெள்ளை மாத்திரமென்றும் விளங்கவில்லை. "பரமான்மாவாகிய வாசுதேவனுக்குத் திருமண்காப்பு உண்டென்பதற்கு ப்பிரமாணங்கள் எணணிறந்தன" என்று கம்பீரமாகவுரைத்த நமது தோழர் எமக்கு ஓர் சுருதிவசனத்தை மாத்திரம் காட்டுவாரென்று நம்புகுரோம். அன்றியும், விஷ்ணுபாரம்யம் வகித்தவர்களாகிய மாத்துவர்கள், வேதத்தில்விஷ்ணுவுக்கு எந்தபுண்டரத்தைக்கண்டு கூறுகிருர்கள்? அல்லது நம்மவர்கூறிய திருமண்காப்பையே ஒப்பியிருக்கிறார்களென்றும் தெரியவில்லை. இவைகளையும் யோசிக்கவேண்டியது. சிவன் பஸ்மதாரியாயிருப்பது சுருதி சித்தமாகுறது போல, விஷ்ணுவுக்குத் திருமண்காப்பும் சுருதி சித்தமாதலவசியம். பாஞ்சராத்திரத்தில், வைகாநசத்தில், என்று போக்குக்காட்டினால், அவைகளை அழிக்கவெழுங் கோடி வசனங்களை யாம் காட்டி மறுப்போம். வீணுக வாதம் பெருகும். விஷ்ணுவைநம்மவர், பரமான்மாவாக மதித்திருக்கின்றமையால், அவருக்குச்சைவ சின்னமாகிய விபூதியை ஒப்பாதது சகஜந்தான். அப்போது சிவனை விட்டுணு உபாசிக்கின்ருனென்றுகூறுஞ்சுருதிக்கு முதல்பரிகாரந்தேட வேண்டியது. அது செய்யாமல் விட்டுணுப் பரமான்மாவென்று கூறிக்கொண்டது அழகல்ல. இந்த வேதவசனம் அர்த்தவாதமாகையால், யாம் விட்டுணுவுக்கு விபூதியை ஒப்போமென்று சொன்னதே போதுமெனில்; அந்த வசனம் எந்தவிஷயத்தில் அர்த்தவாதம்? விஷ்ணுவுக்குச் சிவோபாசனை விஷயத்திலா? அவருக்கு விபூதி தாரண விஷயத்திலா? அல்லது இரண்டுவிஷயங்களிலுமா? நம்மவர் விபூதி விஷயத்தில் மாத்திரமே சங்கித்தாராகையால் இந்த ஒரு விஷயத்தின் மாத்திரமென்றே நிச்சயிக்க வேண்டியிருக்குறது. அப்படிக் கொள்ளுங்கால், மேலுண்டாகும் பரிகாரத்தைக் கூறுகின்ருேம். விபூதியைவிட்டுணுவுக்கு அர்த்தவாதமாகக் கொள்வதற்கு முன்னர் அவருக்கு யதார்த்தத்திலுள்ள புண்டரத்தைச் சுருதி மூலமாகக் காட்டி நாட்டவேண்டும். அஃதின்றிக் கஷ்டமாயிருக்கிற விடத்தில் அர்த்தவாதத்தை யபேக்ஷிப்பது தப்பு வழிதேடுவதே யாகும். மேல், "தனது தெய்வத்தின் அடையாளங்களை அவர்களது தொண்டர்களணிந்து வருவது வழக்கம்,, என்று நம்மவர்கூறினாராகையால், விட்டுணுவைப்பரமான்மா வாகத்துணிந்து கூறிய அவர் தமது விஷ்ணுவுக்கும், அவரது தொண்டராகிய சிவனுக்கும் தமது திருமண் காப்பைக் காட்டிச் சாதிப்பாரென்றும் நம்புகிருேம். யதார்த்தத்திலில்லையேனும், அர்த்தவாதத்திலாவது ஓர் வசனத்தைத் தேடிக்காட்டி, அந்தவசனம் வேதத்திலுள்ளதுதான் என்று யாவரையும் ஒப்பும்படி செய்யவேண்டியது. யாவரையும் என்றது, வடகலையார், தென்கலையார், மாத்துவர், ஸ்மார்த்தர், சைவர்என்னுமிவரை. இன்னும் அவர் ஒப்புக்கொண்ட வேதவசனத்தில் சிவனுக்கு விஷ்ணு தொண்டரென்று ஏற்பட்டமையால, சிவமாகிய தெய்வத்தின் அடையாளத்தை விட்டுணுவாகிய தொண்டரணிந்தாரென்பதை அவர் காட்டிய மேல் நியாயப்படியும் அவர்மறுக்கக்கூடாது. இவைகளை இனியேனும் நம்மதோழர் கவனிக்கக்கடவர்.

இங்ஙனம் நிற்க, "இந்திரன் முதலியோருடன் கூடப் பரிவாரதேவதைகளில் ஒருவராய்ச்சிவனை வழிபடும்விட்டுணுவுக்குத்திருநீறு முதலியன உளதேனும், சாக்ஷாத் லட்சுமிநாதனுன பரமனுக்குத்திருநீறு உளதென எவ்விதஞ் சொல்லலாம் ?

[illegible]

என்று நம்மவர் ஓரதிசயங் கூறினர். இவர் கருத்து எமக்கு அதிகமாய்ப் புலப்படவில்லை. ஆயினுங் கொஞ்சம் யோசிக்கின்றோம். சிவனுடைய பரிவார விஷ்ணுஒருவரும், லட்சுமீபதியானவிஷ்ணு ஒருவரும், ஆகஇரண்டு விட்டுணுக்களை நம்மவர் ஒப்பியதற்கு எந்தச்சுருதி இடங்கொடுத்தது? எந்த வைணவ நூல்களிடங்கொடுத்தன? வைணவ சித்தாந்தத்தில் ஸ்திதி கர்த்தாவும், சத்துவவிசிட்டரும், திரிமூர்த்திகளி லொருவருமாகிய விட்டுணுவையே பரமபதநாதனென்றும், திரிமூர்த்திகளுக்குமேல்நாலாவது மூர்த்தியாக ஓர்விட்டுணு இல்லையென்றுந் திர்மான மாகையால்; நம்மவர் கூறியது அந்தச்சித்தாந்தத்தையும் அழிக்கின்றது. அதவா ஒப்புக்கொள்வோம். அந்தப்பரிவார விஷ்ணுவைச் சிவன் உண்டுபண்ணித் தன்னிடஞ் சேவகத்துக்குவைத்துக் கொண்டனரா? விஷ்ணுவே தம்மைப்போலொருவரைச் சிவனுக்கு வேலைசெய்ய உண்டு பண்ணிக் கொடுத்தாரா? அல்லது பரமபதவிட்டுணுவைப்போல் அவரும் ஓர் சுயம்புவாய் விளங்கிக் கொண்டிருக்கின்றாரா? என்னுமிவைகளில் ஒன்றைத் தீர்மானித்து நம்மவர் திருப்தி செய்ய வேண்டியது. எமது பக்ஷம் பரிவாரவிஷ்ணுவும், பரமபதவிட்டுணுவும், வேறுவேறு முதல்களல்லவென்பதே. ஆகையால், பரிவாரவிட்டுணுவுக்கு நம்மவர் ஒப்பிய விபூதியே அவருடையபரமபத விட்டுணுவுக்கும் நிலைத்தது. ருக்ஸம்ஹிதையில் "தவஸ்ரீயே, என்னும் வாக்கியத்தில் சமஸ்த தேவர்களும் சிவலிங்கார்ச்சனையால் ஐசுவரியங்களை அடைந்தார்களெனவும், லட்சுமீ சமேதராகிய விட்டுணுவானவர் சிவலிங்கத்தை யர்ச்சித்துப் பரமபதத்தை அடைந்தாரெனவும் சொல்லப்பட்டிருக்கின்றது. விபூதிதரித்துச் சிவார்ச்சனை செய்த பலந்தானே லட்சுமீபதியாகிய விட்டுணுவுக்குப் பரமபத வாழ்வாக முடிந்தமையால்; பரமபதநாதனுக்கும் விபூதி கூறலாமா? என்றுநம்மவர் கடாவியதும் அணுஞ் செய்யாதொழிந்தது. சிவன் ஒருவரே பதியும், யாவரும் வணங்குந் தெய்வமுமாக விளங்குங்கால், அவருடைய தொண்டர்களாகிய விஷ்ணு பிரஹ்மாதி சமஸ்தமான தேவரும் தங்கள் தெய்வத்தின் அடையாளமாகிய விபூதியையே தரிக்கின்றார்களென்று சொல்லுவதில் சந்தேகமென்னத்திற்கு? [சுருதிவாக்கியங்களை வடமொழியில் காண்க] பலசுருதிகள் சிவன் ஒருவரே தெய்வமும் அவரே வழிபடத்தக்கவரும் என்பதற்குச் சான்றுகின்றன. "[illegible]" என்று விளங்கும் சுருதியில் விட்டுணுவுக்குச் சிவன் பிரசாதம் பண்ணினார் என்று பேறப்படுகின்றது. "[illegible]" என்கிற சுருதியில் சிவன் தியானிக்கப்படுகிற வஸ்துவாகிறதுபோல், அந்த வஸ்துவை நாராயணர்தியானத்தால்உபாசிக்கின்றவர் என்றவெளியாகின்றது. இப்படிப்பலவிதத்தால் நிருபணத்தைப் பெறும் சிவோபாஸகத்துவம் விஷ்ணுவுக்கு அசைக்கப்படாததுபோல், அவ்வுபாஸனைக்கு முதலங்கமாயுள்ள விபூதியும் அந்த விட்டுணுவுக்கு நிலைபெற்றது. "நாராயணனே காரணப்பொருள் என்றும், அனைத்திற்கும் அந்தர்யாமி யென்றும், எல்லாராலும் வழிபடத்தக்கவரென்றும் வேதங்கள் கூறுகின்றன," என்றும் நம்மவர் கூறினர். இதில் எமக்கு விரோதமில்லை. திருக்கோயிலி லிருக்கும் ஓர் விக்கிரகத்தையே காரணப்பொருளென்றும், அந்தர்யாமியென்றும், யாவரும் வழிபடுவதென்றும்யாம் கூறப்பின்னிட்டோம். சிவனேஸ்தாவரமாகிய அந்த

[illegible]

ஸ்தானத்தில வழிபட வேண்டியது அவசியமாகையால், அப்படியே ஜங்கமமாகிய விஷ்ணுவையும் கூறி அவரிடத்தில்சிவனை வழிபடவேதம் வாதிக்கும். அர்ச்சுனன், கிருஷ்ணனிடத்தில் சிவபூசை செய்து வழிபட்டதே சான்று. சிவனையும் விஷ்ணுவையும் பிரதிபாதிக்கும் சுருதிகளைப்பார்க்கிற போதே அவற்றின் பலதுர்பலங்கள் விளங்குமாகையால் இதைஇம்மட்டில் நிறுத்தினேம்.

மேல் "இந்த விஷ்ணுவும் விபூதியைத் தரிக்கின்றார் எனச் சொல்லாது எவ்விதம் விபூதியை வேதம் புகழும்,, என்று நம்மவர் பிரஸ்தாபித்தார். விஷ்ணுவானவர் கிருத்ய கர்த்தாக்களில் பிரஹ்மேந்திரர்களுக்குப் பெரியவரேயன்றி, ஞானகர்த்தாக்களில் அவருக்கு மேலிட்டபேர் பலரிருக்கின்றார்கள். அவர்கள், லோககிருத்தியங்களையும், அதிகாரங்களையும் விரும்பார்கள். ஆகையால், நம்மவர்விட்டுணுவினிடங் கொண்டகௌரவம் அவலமாயிற்று. ஆதலால் இனி நமது நண்பர் மூற்கூறிய சுருதியையும் கொஞ்சம்கவனிக்கக்கடவர். சிவனுக்கு விஷ்ணுவாதி பிபீலிகாந்தமாயுள்ள ஸர்வஜந்துக்களும் சமகிருட்டியேயாகையால், விட்டுணுவுக்கென்று பிறிதாக ஓர் சுருதியில் விபூதிதாரணஞ் சொல்லவேண்டுமென்று அபேக்ஷித்தது அயுக்தமாயிற்று. "சிவேசவிஷ்ணுநாசைவ. ப்ரஹ்மணுவஜ்ரிணுதநதா,, என்று தொடங்கிய சூதசங்கிதா வசனத்தில் சிவன், விட்டுணு, பிரம்மா, அவரதுதேவிமார், இந்திராதிகள், அவரது ஸ்திரீகள், பிராம்மணாதிகள், வித்துவான்கள், முனிவர்கள் ஆகிய யாவருக்கும்விபூதிதாரணங் கூறப்பட்டிருக்கின்றது. இவைகளைக் கூர்ந்து யோசிக்க வேண்டியது. இவ்வளவில் நிறுத்தி, இன்னுமொரு சந்தர்ப்பத்தில், நமது வைகாநசரவர்களது விடையில் அடங்கிய மற்றைய விடயங்களைப் பற்றியும் பிரகாசப்படுத்துவாம்.

ஸித்தாந்தி.

பாஷோத்பத்திப்பிரசங்சம்

(தொடர்ச்சி)

ஓரிடம் ஒரு அழகிய புட்பத்தைக்கண்ட குழந்தை அதைக் கண்டு, தனக்கு அது வேண்டுமெனக்கருதி அழத்தடங்கின் அவன் அன்னை, குழந்தைக்குநெஞ்சுவரண்டிருக்குமெனக்கருதி பாலுண்ணவைத்தும், ஓயாவிடத்து, வேறெந்தநோவோ என்று வருந்தி, அதற்கு வேண்டியபடி செய்தும்கடைசியில்அவன் மனதில் விரும்பிய புட்பம் வந்தாலொழிய அவன் ஓய்வதை யாம் கண்டோமில்லையாதலாலும்; அப்புஷ்பம்கையில் கிடைத்தவுடனே மனமகிழ்ந்து முகத்தில் புன்சிரிப்புக் காட்டுதலாலும், உற்றுநோக்கில் அக்காலத்திலும்அக்குழந்தைகளுக்கும் நினைக்கும் சக்திவெளியாகும். அதுகொண்டுநாம்அறிவது யாது? எனில், அந்தக்குழந்தை, "இந்தபுஷ்பம் அழகுள்ளது, இதை யாம் எடுத்து வைத்துககொண்டு விளையாட வேண்டும்; அதை எனக்குக்கொண்டுவந்து கொடு?,,என்று தாயைக் கேழ்க்குறதற்குப்பதிலாக அழுததால், அவனுக்கு அக்காலம் அவ்வெண்ணம் இருந்ததாய் நம்பினேம். மேலும், மற்றய எந்த ஜந்துக்களிலும், இவ்விதம்எண்ணிக்கை இருப்பது யாம்அரியத்தக்கதே. எங்ஙனம் எனில்; ஓர்வீட்டின் மேல் கூரையில் ஓர் கூடுவைத்து, அதில் இரண்டு புருக்கள் குடியிருக்குமேல்; அவற்றுள் ஆண்புரு காலையில் எழுந்து தனது சிறு குஞ்சுகளை காக்க

[illegible]

மற்றொருபெண்புறவை வைத்து தான் வெளியில் செல்லும் (அதாவது பெண் முட்டைகளை அடைகார்க்கும். ஆண் இரை தேடும்) வெளியில் சென்றபுறு தான் கழனிகளின் கரைகளில் சிதறிக்கிடக்கும் தானியங்களைத்தின்று தன் வயிறு நிறையச்செய்து, உடனே அவ்விடம் விட்டு தனது கூட்டில் தங்கியிருக்கும் பெண்புறவிற்கும் குஞ்சுகளுக்கும் வேண்டிய நெற்கதிர்களை எடுத்து கூடுள்ளவிடம் வரவும்; அதின் வரவைஎதிர்பார்த்திருந்த மற்றொருபுறவுடன் ஆனந்திக்கவும், யாம் காணலாம். இவ்விடம் "பெண்ணே! நீ நான்வருமளவும் நமது முட்டைகளைககார்த்திரு. யான் வெளியிற் சென்று என்வயிற்றை நிரப்பிக்கொண்டு, உனக்கும் வேண்டியதை எடுத்துக்கொண்டு வருவேன். யாம் இருவரும் சேர்ந்து வெளியிற் செல்வோமேல், வெகுபிரயாசப்பட்டு சம்பாதித்த நமது முட்டைகளுக்கு ஏதேனும் கெடுதி சம்பவிக்கும். அதுகொண்டு யாம் இருவருள் ஒருவரேவெளியில் செல்லவேண்டும். நமக்கு வயிற்றுப் பிழைப்புக்கோவெளியிற்சென்றலன்றி வேறுகதியில்லை,, என்றுதுடங்கிய பல விவகாரங்கள், அவைகளைக்காட்டும் சப்தங்களில்லாமலே எண்ணமுள்மாத்திரமாய் வெளியிடப்படுகின்றன. பலவிதம் சொல்வதிற் பயனில்லை. நாம்காணும் ஜந்துகளுள், எரும்புமுதலியவற்றிற்கும்கூடத்தத்தம் எண்ணங்களை மற்றவற்குக் காட்ட உபாயங்கள் இருப்பதாயே தெரியவருகுறது. ஐயா !! பாருங்கள் ! ஒருசிற்றெரும்பு அவசியமாகிய வெகு காரியங்களுள்ளதுபோல் பரபரப்பாய் திரிந்து வரும்பொழுது, மற்றொரு சிற்றெரும்பைக் காணுமேல், தான் தனது முகத்தைத் தன் முன்வந்த மற்றொரு சிற்றெரும்பின் முகத்தில்சேர்த்து சிறிது காலம் நிற்கின்றது. அதுகொண்டே மற்றொரு சிற்றெரும்பு இவ்விதம்அறிந்திருக்கவேண்டும். எவ்விதம் எனில் "இதோசமீபத்தில் ஓர் சர்க்கரைக் குடம் மூடாமல் வைத்திருக்குறது; அதில் நம்மவர் பலர் நுழைந்தார்களாம். நானும் அவ்விடம் சென்று எனக்கு வேண்டிய சிறிது பாகங்களை கொண்டு வருவேன்,, என்பது. ஆனால்இவ்விதம் எடுத்துபன்னிய சிப்பது இப்பேற்கொத்த சபையில் பரிகாசத்திற்கிடமாயினும் ஆகும். இது விஷயம் உற்றுநோக்கில் ஒவ்வொருவரும் அனுபவித்துப் பார்க்கலாம். அதுகொண்டே ஜயதேவகவிராஜர் தாமியற்றியபிரசன்னராகவம் என்குற நாடகத்தில், யாஞ்ஞவல்கியமுனிவர் சிஷரான தால்பியர் என்பவர் தனது பரமாசாரியன் திருவருளால், தாம் வண்டுகளின் வார்த்தைகளையும் அறிந்து மகிழ்ந்தார்; என்றிருப்பதுஉசிதமேயாகும். மேலும், மனிசர்களிலும் தமதுகருத்துகள், சத்தமின்றி வேறு கருவிகளாலும் காட்டப்படுகின்றன இதற்குநித்திரிசனம் ஆங்கிகம் முதலிய நாட்டியபேதங்களால் நன்றாய் எல்லோரும் அறியும்படி தமதுட்கருத்தை நாடகங்களில் நடர்கள்வெளியிடுவதே போதுமானது. மற்றும் சிலர் தான் வாய்திறந்துபேசாமல் "[illegible]" என்று துடங்கியபல சுலோகார்த்தங்களை வெகு விசேஷமாக எடுத்துக்காட்டவும் அதற்கு பதாகம், திரிபதாகம் சடகாமுகம், ஹம்ஸாஸியம், கர்த்தரீமுகம், ஹம்ஸபக்ஷம், முதலியஹஸ்தங்களைக் கருவிகளாய்கொள்ளவும், யாம்கண்டதுண்டு. அதுகொண்டே ஸ்ரீமாளவிகாக்னிமித்திரம் என்குற நாடகத்தில் கவிகளின் மணியாயகாளிதாசன்" [illegible]" "சொற்களை உள்ளடக்கியதமது அங்கத்தில்

[illegible]

கண்ட அபினயத்தால் தாற்பரியம் விளங்கிற்று,, என்று நாட்டியத்தைப் புகழ்ந்தது. சிலவிடத்தில் ,, [illegible],, என்று தொடங்கிய சில வாக்கியங்கள் அவ்வப்பதங்களுக்கு நேர் விரோதமான பொருள்கள் விளங்குவதும் உண்டு மேலும் இக்காலத்தில் நாகரீகம் சிறந்ததாய் உலகெலாம் பெயர் பெற்று லண்டன் முதலிய பெரிய நகரங்களில், இயற்கையில் சத்தம் இன்னதென அறிய சக்தியற்று செவிடு ஊமை முதலியவர்களுக்கு, பற்பல பாடசாலைகள் ஏற்பட்டு அவர்களும் படித்து வருகுறார்கள், அவ்விடம் படித்துத் தேர்ச்சிபெற்று வெளிவந்து சாதாரண ஜனங்களிலும் அதிகமாய் ஊமை செவுடுகள் ஒருவர்க்கொருவர் விவகாரப் பயிற்சியடைந்து வருகுறார்கள். அந்தோ! யாதுரைப்போம்!! மகாவித்துவான்களும் மதி மயங்கத்தக்க பெரும் காவியங்களையும் எழுத ஆரம்பிக்குறார்கள். இது விஷயம் சொல்ல வேண்டியதுயாதிருக்கின்றது. அறிஞர்கள் இதியம்குளிர அவர்களிகூரத் தகுந்த பதவி பெற்றதாய் அவர் எழுதியபுஸ்தகங்கள்நமதுதேசம் எங்கும் பரவி வரவும், நாம் படிக்கவும், ஏற்பட்டன. இனி விரிவஞ்சிச்சுருக்குவோம். யாம் இதுவரையில் எடுத்துரைத்த காரணங்களால், நடையும் நழுவுதலும், கத்தியும் கத்திரிப்பும், எழுத்தாணியும் எழுதுவதும், சித்திரத்தூலிகையும் சித்திரித்தலும் போல எண்ணமும் பாஷையும் என துணியப்பட்டது.

ஐயா!

இங்கோரு வினா வெழுந்தது.

ஆதியில் ஒரேரூபமாய் வெளியில் வந்த சத்தம் எண்ணிறந்த வேற்றுமைகள் பெற்று தேசங்கடோறும் வேறுபட்டுப் பலரூபம் பெற்றதற்குக் காரணம் என்ன? என்பது. அதுவே யாம் விசாரிக்கவேண்டியவற்றுள் முதன்மை பெற்றதெனக் கொள்க. இது இவ்விடம் ஊகிக்கத்தக்கது; முதல் சிருட்டியில் ஜனங்கள், பசுக்களைப்போன்ற ஒருமாதிரியாய் இருந்தார்கள். அவர்கள் காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும் வஸித்து, காய், கிழங்குகள், பழங்கள் இவைகளால் வயிற்றை நிறைத்து, மரங்களின் பட்டைகளை உடுத்துத் திரிந்துகொண்டிருந்தார்கள் அவர்கள் அக்காலம் பேசிய பாஷை முற்றிலும் மற்ற ஜந்துக்களைப்போலவே விளங்காத்தன்மை பெற்றிருந்தது. பிறகுசில காலம் செல்ல, சூரியன் உதித்து நாழிகைக்கு நாழிகை அதிக உஷ்ணம் தருவதுபோல், மனிதர்கள் புத்திவிருத்திக்கவே, மலையின் குகைகளை விடுச் சில குடிசைகளில் குடியேறி, பச்சைக்காய்களை விட்டு, வேகவைத்துத் தின்றும், முரட்டுப்பட்டைகளைவிடுத்து, மெதுவான பட்டைகளை உடுத்தியும், தமது பாஷைகளையும் அவர்களே ஓர்வகை சீர் திருத்தப்படுத்தினர்கள். பிறகுகிரமக்கிரமமாய் சீர்திருத்த படிகளை பலகடந்து, இப்பொழுது அனேகப் படிகளுக்கு மேலான படியில், இந்த மனுஷியலோகம் இருக்கின்றது. நமது பாஷையும், சந்திர கலை போலக் கிரமமாய் சீர்திருத்தம் பெற்றே நாம் காணும் இன்னிலைமையில் வந்துசேர்ந்தது, ஆனல் இதற்கு நல்ல திருத்தம் இந்தக் காலத்தில் துடங்கியதென்று குறிக்கமாத்திரம் வல்லமை எமக்கில்லை. ரயில், மின்சாரத்தந்தி, அச்சு யந்திரம் முதலிய கருவிகள் விருத்திக்கு வந்ததுபோல் பாஷையும்முன்னுக்கு வந்ததே. ஆயினும் நாம் அனுமானப்பிரமாணப்பேரொளியின் உதவியால்; ஒருவழியும் தோன்றுப் பேரிருளடைந்த

[illegible]

முற்காலத்தவர் சரித்திரத்தில் நுழைகின்றோம். அதுவிஷய த்தில் அந்தந்தப்பாஷைகளின் சுருபமும், வரலாறும், ஆலோசித்துப்பார்த்தால் பெருங்கருவியாய் தோன்றும் என்பதற் கையமில்லை.

ஆதிகாலத்தில் எல்லாவித அங்கங்களும் நிறைந்ததும், ருபகோபமாதி இவ்வியாலங் காரங்கள மைந்ததுமான பெரிய சருவி, பாஷை யென்பது சம்சயமில்லை. பிறகு கிரமக்கிரமமாக வேற்றுமைகளிலும் வேற்றுமை தோன்ற, பலவிதத்திருபுகளைப்பெற்று உருமாறத் தலைப்பட்டது. பிறகு முற்றிலும் மாறி மூலப்பகுதிகள் மாத்திரையில்; என்பு மாத்திரமாய் நின்ற மடந்தைபோல், எல்லோரும் வருத்தம் அடையத்தக்க ஓர் திசையைப்பெற்றது. மேல்திரிபை யாம் எதிர் பாற்கில், அவ்வழி இருள் நிறைந்தமையால், முற்றிலும் ஊகிக்க சமதனுமான விளக்கு நுண்ணியது கண்டு, அந்தவழியை யாம் துறந்தோம். ஆராயும்வழிபாஷைக்கு மூன்று நிலைமைகள் ஏற்பட்டன. அவற்றுள் முதல் நிலமையில், அந்தப்பாஷைப்பகுதி மாத்திரமாய் விகுதி யற்றதாய் பொருள்களை உணர்ந்து உபயோகிக்கப்பட்டு வந்தது. இப்பொழுதும், சீனதேசத்து பாஷையில் "தா,, என்னும் ஓரே சொல் பெரிது என்னும் பொருளிலும், பெருமை என்னும் பொருளிலும், அதிகம்என்னும் பொருளிலும், சீக்கிரம் என்னும் பொருளிலும், உபயோகிக்கப்பட்டு வருகின்றது. அவ்விதமே "மின்,, என்கிற சொற்கு ஜனம் என்று பொருள் "லி,, என்பதற்கு வலிமை என்பது பொருள். சனங்களின் வலிமை யென்குற அர்த்தத்தில் இவ்விருபதங்களும் சேர்ந்து உபயோகிக்கப் படுகின்றது. இவ்விதமே வேற்றுமைகளும், தலையைச்சுற்றி மூக்கைத்தேடுவதுபோல் ஒருவிதம் எடுத்துரைக்கலாம். "த்சர்ஜ,, என்குற பதம் ஓர்கூட்டத்தைக் குறிக்கும். "ஜின்,, என்குற சப்தம் மனுஷியரைக் குறிக்கும். ஒருமனிதன், என்குற பொருளில் "ஜின்,, என்றுரைப்பதும்; பல மனிதர்கள் என்குற அர்த்தத்தில் "த்ஸர்ஜஜின்,, என்று சொல்வதும், "ன்யு,, பெண் "த்ஸே,, குழந்தை. தனது பெண்ணின் மகள், என்று சொல்லவேண்டுமானல், "ன்யுத்ஸெ,, என்றும் உண்டு. இந்தப்பாஷையில் எல்லாம் பெரும்பாலும் ஓரெழுத்துள்ள சொற்களாதலால், இதை ஏகஸ்வரபாஷை என்று வழங்குவது.

ரு. ரு. வ. இன்னும்வரும்.

மொழிபெயர்ப்பு.

குதர்க்காசல குலிசத்திற்கு விடை

தென்னாட்டில் விளங்கும் ஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதர் களென்னும், பண்டிதர் மணியையும், "ப்ரம்மவித்தியா,, பத்திரிகாசாரியரான ஸ்ரீநிவாசசாஸ்திரிகளையும், சாமக்குளம் வேங்கட்ரமண தாசர் அவர்களையும் மகாப்பிருக்கிய ராகிய நமது வைகானஸமணியையும் யாம் மகிழ்ந்து வந்தனம் செய்குவோம். நமது நண்பர் ஸ்ரீநிவாசசாஸ்திரிகள் வெளிக்கிக் கொண்டுவர்தஇந்த ப்ரம்மவித்தியா பத்திரிகை; தூங்கும் பண்டிதர்களை; அரசர்களை எழுப்பும் அரசாட்சிபோல் எழுப்பிவருகுறது.

[illegible]

ரா. ரா. வ.

[illegible]

ஐயா!

உபநிடதங்கள் இவ்வளவென்க் கணக்கு நிச்சயப்பட்டதா? யாம் (௱அ) உபநிடதங்கள் உண்டென்று கேள்விப்படுகிறோம் அவற்றுள் சில உபநிடதங்கள் சிற்சில விடப் கிடைக்கக்கூடும். அவைகள், பாடங்களும் தேசவேறுபாட்டால் மாறியிருப்பது வழக்கம். ஆயினும் சில பெரியோர்கள் [௱அ] உபநிடதங்களைப்படிக்கிறார்கள். சிலர் [௩உ] உபநிடதங்களையே அப்பியசித்து வருகிறார்கள். அநேகர் முக்கியமாய் [ம] உபநிடதங்களையே வசாரித்து வருகிறார்கள். இக்கலியில் கபடம் மிஞ்ச நல்லப்பிரதிகள் சில பெரியோர்கள் கிருகங்களில் மாத்திரம் கிடைக்கின்றன. அந்தந்த மதஸ்தர் தத்தம் ஆசிரியர் கையாடியதும்; தத்தம் மதத்திற்குரிய தேவதைகளின் தத்துவத்தை எடுத்து விரிப்பதுமான உபநிடதங்களையே மிக ஆவலுடன் படித்து வருகிறார்கள். இவ்விதமே உபநிடதங்கள் அளவைக்கடந்தன வென்று "மத்துவமதவித்துவஸ மனத்தில், ஸ்ரீமான் அப்பயதீக்ஷிதர் அவர்கள் எடுத்துரைத்தார். உத்திர தேசங்களில் பாடம் சுத்தமாய் கிடைப்பதில்லை. சில உபநிடதங்களின் பெயர்கள் ௩. வது பத்திரிகையில் பத்திராதிபர் குறித்திருக்கின்றார். அவைகளுள் மகோபநிடதம் வாஸுதேவோபநிடதம் இவ்விரண்டும் கணக்கிடப் பட்டுள்ளது. மகோபநிடதத்தில் "[illegible]" ,, என்ற பேரப்பட்ட வசனத்தால், "சாங்கியம், யோகம் இவைகளாலறியத்தக்க வியாபகனான நாராயணனை ஊர்த்துவபுண்டரம் தரித்து ஒருவன் அறிவானாகில், அவன் ஸகலஸம்ஸாரபாசங்களை நீக்கி ஸ்ரீமன்னாராயணனை அடைவான்,, என்கிறபொருள் வெளியாவதாலும, அவ்விதம்கடசாகையில் "[illegible]" உள்ள இம்மந்திரத்தினால் "எந்த மகாத்மா சக்கிர தாரியாய் ஊர்த்துவ புண்டரம் தரித்து சுவரத்தாலும், மந்திரத்தாலும், தனதுள்ளத்தில் தியானிப்பானேல் அவன் அவனை அடைவான் என்று பொருள் வெளியாவதாலும்; பல்லவசாகையில் "[illegible]" யக்கிய மூர்த்தியாகிய விட்டுணுவின் பூசையின் தொடக்கத்தில் ஊர்த்துவ புண்டரம் என்று தொடங்கி "[illegible]" முன்னோர் எழுவரையும் நற்கதியடையச் செய்து தானும் விட்டுணு பதமடைவான் என்றிருப்பதாலும், அதேசாகையில் ஏனையத்தேவர்களைப் பூசிப்பவர்களுக்கும், ஊர்த்துவ புண்டரம் விசேஷமென்று ([illegible]) இம்மந்திரத்தால் வெளியாவதாலும், ஸ்காந்தத்தில் சிவபக்தர் தரிக்கும் ஊர்த்துவ புண்டரத்துக்கு சிவஸாரூப்பியம் பலம் மென்றோரிடத்திலும், மற்றோரிடத்தில் "முருக்கே திருநீறும் நெடுக்கே திருமண்ணும் உசிதம்,, என்று காணப்படுவதாலும், இது விஷயம் வைதிகமோ? அவைதிகமோ? என்று வித்துவான்களே நன்றாய் ஆலோசிப்பார்களாக. மேலும் ஆதர் வணத்தில்

[illegible]

[illegible]'' என்குற மந்திரம் வெளிப்படையாம். திருமாலின் திருவடிகளைப் போல் நடுவில் இடம் விட்டு ஊர்த்துவபுண்டரம் தரிப்பவன் விட்டுணுப் பிரியனவான் யென்றும் புண்ணியசாலியாவான் என்றும், பக்தியைப்பெறுவான் எனறும் சொல்லுதலும் இதற்குச் சான்று. ஆதலால் ஓரிடம் சாமான்னியமாய ஊர்த்துவ புண்டரம் சொல்லப்படினும் அவை ஓர் விசேஷத்திற்றனே நிலைபெறுமென்குற மீமாஞ்சா நியாய வலியால் கிடைத்த பொருளை ''வாராகோபநிடதம்,, எடுத்துரைக்கப்புகுந்தது. வாராகோபநிடதம் என்பது பெரிதும் சிறிதுமாய் இருவகைப்பட்டது. சிரிய வாராகோபநிடதத்தில் திருமண்காப்புக் காணப்படுவதால் 10 ம்செம்பர் பத்திரிகையில் வெண்திருமண் தரித்தல் அவைதிகம்,, என்றெழுதியது மறுக்கப்பட்டது. அங்ஙனமன்றோ ''வராகரூபியான விட்டுணுவை வணங்கி சனத்குமாரர் கேட்டார். ஐயா! என்னிடம் கிருபைசெய்து,, ஊர்த்துவபுண்டரத்தின் விதியையும், அதின் திரவியம், இடங்கள், ரேகைகள், மந்திரங்கள், அதின் பலம் இவைகளை எடுத்துரைக்க வேண்டும் என்று வராகர் கூறினர். திருப்பார்க் கடலினின்று ஸ்ரீவைநதேயன் பாற்கட்டிகளை கொணர்ந்தான் என்றும் வெணதிருமண் சாதகம் ஆகும் என்றும், ''[illegible]'' எனகுற மந்திரத்தால் அத்திருமண்ணை நமஸ்கரிக்க வேண்டுமென்றும் ''[illegible]'' என்றும் ''[illegible],, என்றும் சொல்லியிருக்கின்றது. இன்னும் வரும். மொழிபெயர்ப்பு.

ஒப்பம் இங்ஙனம் வஞ்சிநாட்டின் ராஜசபையிலுள்ள
ஓர்வைஷணவன்.

ஸ்ரீமத் ப்ரம்ம வித்தியா பத்திராதிபர் அவர்களுக்கு வந்தனம்

ஐயா,—அடியில் வரும் விடயத்தை தங்கள்பத்திரிகையில் பதிப்பித்து எனது சந்தேகத்தை நிவிர்த்திக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

ப்ரம்மா, விட்டுணு, ருத்திரன் ஆகிய இவர்கள் திருமூர்த்திகளெனப் படுகிறார்கள். இவர்களை சிலர் நித்தியமாய், சர்வவியாபியாய், சிதசிதாத்மகமாகிய எல்லாப் பொருள் களுக்குக் காரணமாய் பரப்பிரம்மமென்று சொல்லுகுறார்கள். இவர்தொழில் சிருட்டி, ஸ்திதி, சம்ஹார சக்தி ளென்று சொல்லுகிறார்கள். இவர்களை சிலர் மாயையினுடைய சத்துவ ரஜஸ், தமோகுணங்களென்று சொல்லுகுறார்கள். பின்னும் சிலர் பிருதுவி அப்பு, தேயு, ஆகிய பூதங்களை பிரம்மா, விட்டுணு, ருத்திரனென்று உருவகப்படுத்திச் சொல்லப்பட்டிருக்கின்றது என்றிருக்கிறார்கள். மற்றுஞ்சிலரோ இவர்கள் நம்மைப்போன்ற ஜீவர்களேன்றும். வெவ்வேறு பிரதேசங்களில், பெண்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சாதி பிள்ளைகளோடு கூடி வசித்தவர்களென்றும், பிரம்மக்ஞானிகளாயும், யோகிகளாயுமிருந்து, தம்மைச் சேர்ந்தவர்களுக்கு உபதேசம் செய்து வந்த ஆசாரிய புருடர்களென்றும் சொல்லுகுறார்கள். இவர்கள் பரப்பிரம்மத்தின் சக்திகளா? அல்லது மாயையின் குணங்களா? அல்லது பூதங்களா? அல்லது ஜீவர்களா? இவர்கள் வெவ்வேறு வியக்திகளா? அல்லது ஒன்றேயா? இவர்கள் நித்தியர்களா? அநித்தியர்களா? இவர்கள் ஸ்தூல ரூபமகொண்டவர்களா? அல்லது சூக்ஷ்ம ரூபிகளா?

இப்படிக்கு
தெரிந்துகொள்ளவிரும்புவன்

ம-௱-௱-ஸ்ரீப்ரம்மவித்தியாபத்திராதிபர் அவர்களைதர்மங்கரோதுபக்ஷி கேட்கும் வினா

அறிவு ஆத்மாவென்றும், அது தேகதத்துவங்களின் அம்சமல்லவென்றும், தேகமழிந்தாலும் ஆத்மா அழியாதென்றும், அது தேகாதி ஜகத்தின் இச்சையல்லவெனவும், ஜன்மங்களும், சுகதுக்கங்களும் அதைத்தழுவுமென்றும், பந்தங்களையொழித்து ஆத்மா நிர்மலமாகில்; அகண்ட பரிபூர்ண சுகமாகிய பரமாத்ம நிலை சித்திக்குமென்றும், அந்தப்பரமாத்மநிலை காலத்திரயத்திலும் பிரபஞ்சத்தைப் பற்றுமற்சச்சிதானந்த வடிவாய் தானுயிருக்குற தென்றும், சொல்லப்படுவதானது சித்தாந்தமாகக் கொள்ளப்படுவதற்குத் தகுந்த நியாயங்களை வித்துவான்கள் வெளியிடச் செய்வீர்களென்று வேண்டுகுறேன்

ப்ரம்ம வித்தியா

மதமும், அதின் பிரயோசனமும், அதின் ஆசிரியரும்.

(தொடர்ச்சி)

ஹஸ்தாமலகாசாரியர் சரித்திரம்

மேற்கடற் கரையில் கொங்கணமெனப் பெயர் வகித்தவோர்தேசம் உளது. அவ்விடம் ஸ்ரீமத் பரமசிவ பிரான் திருப்பதிகளில் ஒன்றாய திருக்கோகரண மென்னும் ஓர் ஸ்தலம் உண்டு. இலங்கைநாதனாய இராவணன் முதலியசிவபக்தர்கள் தொண்டுபுரிய மகாபலேசனென்னும் திருநாமத்தால் ஆங்கே அமலனாகள் புரிவது யாம் அறிந்ததே. அத்திருப்பதியின் அருகில், ஸ்ரீபலி என்னும் ஓர் அக்கிரகாரம் உண்டு. அதில் வேதம் சாஸ்திரம், புராணம் முதலியவற்றைக் கற்றவரும், யாகம் முதலிய சத்கர்மங்களை அனுஷ்டித்தவருமான, அநேக பிராமணர்கள் ஆயிரத்திற்கு மேல் உண்டு. அவர்களுள் விண்ணுலகில் தேவதைகளுக்குஆசாரியனான பிரகஸ்பதியைப்போல், மண்ணுலகில் ஒப்பில்லாக் குரு எனப்பெயர் பெற்று, உலகத்தார் புண்ணியமே உருவெடுத்ததெனக் கொள்ளற்பாலனவான திருவுருவங்கொண்டு, ஆகாயத்தில் கதிரவன்விளங்கியது போல், இவ்வுலகில், தற்செயற்குரிய பிரபாகரனெனப் பெயர் கொண்டு; ஓர் அந்தணர் மணி இருந்தார். ஜனகமகாராஜனைப்போல்; கர்மானுஷ்டானத்தில் மிகச்சிறந்தவரும், ஜைமினிமுனிவர் இயற்றிய நியாய நூலுக்குக்கடநட்பொருள் விளக்கினவரும், வை

[illegible]

தி. தத்துவங்களை மிகத்தெளிவாய் விரித்துக்காட்டினவரும், எங்கும் பரவிய நல்ல கீர்த்தி யுடையவரும், நாலாசிரமங்களுள் கிரகஸ்தா சிரமமே மிகச்சிறந்ததெனக் கொள்கை யுள்ளவருமான அவ்வந்தண மணிக்கு, அநேகம் குமாரர்கள் இருந்தார்கள். ஒருக்கால் அவ்வந்தணர் இரண்டு வயதுள்ள குழந்தையைக் கையிற்கொண்ட தமது மங்கையுடன் தீர்த்தயாத்திரா நிமித்தமாய் யமுனைக்கரையையடைந்திருக்கையில் பிரபாகராசிரியருடைய தேவியார் தமது தோழிமார்களுடன், யமுனையில் ஸ்நானம் செய்வதின் பொருட்டு தீர்த்தக்கரை சென்று அக்கரையில் தவஞ்செய்யும் ஓர் யோகீசுவரரைக் கண்டு, தாம் ஸ்நானம் செய்து திரும்பிவரும் வரையில் இரண்டு வயதுள்ள தன் பாலனைப் பாதுகாக்கும்படி அந்த யோகீசுவரரிடம் ஒப்புவித்துப் பிறகுதாம் யமுனையில் ஸ்நானம் செய்யச்சென்றனள்.

அம்மங்கையார் ஸ்நானம் முதலிய விதிகளை முடித்துக் கொண்டு முனீசுவரனிடம் வந்து, யமுனையில்விழுந்து மரணமடைந்த தன் பாலகனைக்கண்டு கைகூப்பிக்கதறிக் கொண்டு அம்முனீசுவரனிடம் முறையிட்டனள். அந்த முனீசுவரர் தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பாலகன் தவறிச் சலத்தில் விழுந்து இறந்ததால் தாம் மிக வருத்தமுற்று; அம்மங்கையர் மனக்கவலையை நீக்கக்கருதி, ஏதோ ஒரு உபாயத்தால் அப்பாலகனை பிழைக்கச்செய்து, அத்தேவியாரிடம் சேர்ப்பித்து, அம்மங்கையர் மனத்துயரத்தை நிவிருத்தி செய்து, மிகக் களிக்கச்செய்தனர். பிறகு அத்தேவியார் பிழைத்தபாலகனை எடுத்துக்கொண்டு தமது வீடுவந்து சேர்ந்தனள். சிலகாலம் சென்றபின் பிரபாகராசாரியார் தமது குமாரனுக்கு உபநயன காலம் நெருங்கியது கண்டு பிராமணர்களுக்குரிய விதியைத் தவறாமல் உபனயனம் செய்வித்தனர். அக்குமாரர்வேதங்களைக் கற்பதற்குப் பதிலாய் ஜடத்தன்மையையே ஓர் பெரிய விருதமாய் அப்பியசித்து வந்தார். இவ்விதமே சிலகாலம் சென்றபின், அப்பிரபாகராசாரியார் தமது குமாரனுக்கு 13-வயது ஆகியும் மனுஷத்தன்மையே இல்லாமல் ஊமைபோலிருப்பது கண்டு தீராத்துயரமடைந்து தவித்துக் கொண்டிருக்கையில், ஸ்ரீபகவத்பாதசுவாமிகளவர்கள் திக்குவிஜயத்தின் பொருட்டு தேசங்களெங்கும் சென்று ஸ்ரீகோகர்ணம் வந்து மகாபலனெனப் பெயர் பெற்று விளங்கிவரும் சிவபெருமானுடைய திருவடிகளிற் பணிந்து ஸ்ரீ பலி என்னும் இந்த அக்கிரகாரத்தில் வந்துசேர்ந்தார்கள். பிறகு பிரபாகராசாரியார் யாரோஒரு பெரிய துறவியார் சில சீஷர்களுடன் தமது அக்கிரகாரம் வந்துசேர்ந்திருக்கும் சமாசாரத்தைக் கேட்டு, அப்பெரியோரிடம் சென்று விசாரித்தால் தமது குமாரனுக்கு ஜடத்தன்மை உண்டானதற்குக் காரணம் வெளியாகுமென நினைத்துத்தமது குமாரனுடன் கையில் காணிக்கை கொண்டு, அப்பெரியோரிடம் சென்று, பாதங்களில்பணிந்து, தமதுகுமாரனுக்கு உண்டாகிய ஜடத்தன்மைக்குக் காரணம் யாதென வினவினர். பிறகு அவ்வாசாரிய சுவாமிகள் இக்குமாரன் மீது யோகபலத்தால், யாரோ ஒரு ஆத்மஞானி பிரவேசித்திருக்கிறாரெனத்தாமறிந்தும் அப்பாலகனை நோக்கி, குழந்தாய்! நீயார் என வினவினர். உடனே அவ்வந்தணர்குமாரர், பெருகி விழும் ஆகாய கங்கையின் கர்வத்தை அடக்கும்படி யாகிய வேகத்தோடு கூடிய கீர்வாணபாஷையால், 12. சுலோகங்களால் தனக்கு ஜடத்தன்மை இல்லையென்றும் ஜடங்களுள் சாக்ஷியாயிருப்பதுதாமே

[illegible]

𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌮𑍍

(109. [illegible])

[illegible]

ன்றும், மிகத்தெளிவாயுரைக்கையில் அப்பிரபாகராசாரியார் பாலன்மிகவைராக்கிய மடைந்திருப்பதுகண்டு, தாம் கிரகஸ்தா ச்சிரமத்தையே மேலானதாகக்கொண்டவராதலால் இக்குமாரன் தமக்கு உதவியற்றவனெனத்தீர் மானத்துடன், குமாரனை விட்டு ஆசாரியசுவாமிகளிடம் விடைபெற்றுத் தமது கிரகம் சென்றனர். பிற்கு ஆசாரியசுவாமிக ளவர்கள் இக்குமாரனைத் தமக்குச் சீஷனுகக் கொள்ளுங்கால், அவ்வர்தணர் குமாரரும் துறவரம் பூண்டவராய் வைராக்கிய முளவர்களுள் மிகச்சிறந்தவராயினர். பிரம நிஷ்டையில் சிறந்தவராகிய இம் மகானல், மகாலக்ஷிமியின் மணவாளனுகிய மகாவிஷ்ணுவுக்கு நசலு புஜங்கள் போல், ஆசாரிய சுவாமிகளுக்கு நாலு சிஷர்கள் ஆனர்கள். பிறகுசிலகாலம் சென்றபின், மண்ணுலகைவிட எத்தனித் தஆசாரிய சுவாமிகளால் ஆஞ்ஞாபிக்கப்பட்டு ஹஸ்தாமலகரெனப் பெயரும் பூண்டு துவாரகையில் விளங்கும்மடத்தில் நிலை நிருத்தப்பட்டவராய் அத்வைதமதத்தை மிகச் செழிக்கச் செய்தனர். இவர் 13· வயதிலேயே பிரமவித்தையை ஆசாரிய சுவாமிகளவர்கள் சந்நிதியை யடைந்து கையிற்கொண்ட நெல்லிக்கனிபோல், மிகத்தெளிவாய்உரைத்தன ராதலால் பெரியோர்கள் இவரை ஹஸ்தாமலகாசாரியாரெனப் பெயர் கொண்டவராய் வழங்கிவருகுருர்கள்

தோடகாசாரியர் சரித்திரம் பின்வரும்.

வைராக்கியம்

(109 வது பக்கத்தொடர்ச்சி)

விவேகம். தீர்ந்து தெளிந்து பார்க்குமிடத்தில் பேதைநெஞ்சே!! ஜீவர்களுக்கு சிவனே துணையன்றி, ஜீவர்களுக்கு ஜீவர்கள் துணையாகார்.

மனது. ஆனல், துணையாக நிற்பவர் யார்? பகையாவது எது? மனைவியாதி ஜீவர்கள் வந்தவகை எது?

வி. சிருஷ்டி தொடங்கி மோக்ஷமளவும் துணையாகிநம்மை விட்டு நிலைகாத்திருக்கின்ற உயிருக்கு உறவனுகிய சிவனே துணை.

உள்ளதை மேலவித்து நாசம் பண்ணுகின்ற பகையே அஞ்ஞானம். இதைநீயுள்ளபடி இதுவரையில் அறிந்தாயில்லை. இழிவினல் உனக்கு எவரும் ஒப்பில்லாதிருக்கின்ற நெஞ்சே! நல்வினை தீவினை எனும் இருவினை வழியே வந்துபொருந்திய இவர்களை இவர்பகைவர், இவர்உறவர், எனக்கருதி பகையென்று வெகுளியம், உறவென்று விழைவும் அடைந்து உன்னேடு கூடிய என்னையும் கெடுத்தாய்.

☞ (ஆணவத்தால் மறைந்துகிடந்த உயிரைச்சிவன் தனது காருணியததால் எடுத்து மாயையின்கண் தனுவாதிகளை கொடுத்து, முன்னர் விடடஞ்ஞானத்தை விளக்கிப் பிறகிட்டு சுருதி குருசுவானுபவங்களினுல் சொருபஞானத்தை விளக்கி, ஆனந்தானுபவத்தைகொடுத்தலால் உயிர்க்கு உறவு சிவனென்றும்; உயிரினது இருவகைஞானத்தையும் அனுதியே மறைத்து மோக்ஷமடையுமளவும் துன்பம் செய்தலால் ஆணவம் உயிர்க்குப் பகை என்றும்; நல்வினை அனுபவிக்கு மிடத்து மனைவியாதி உறவரேபகைவராய்த் தேக நாசம் செய்தலாலும், இச்சீவர்க்குள் வினைவழியராய் வந்தவரன்றிப் பகைவருமல்ல உறவருமல்ல என்றும் கூறினேம். இது விஷயத்தைத்

வி. [illegible]

ம. [illegible]

வி. [illegible]

ம. [illegible]

வி. [illegible]

ம. [illegible]

வி. [illegible]

ம. [illegible]

வி. [illegible]

ம. [illegible]

[illegible]

தொட்டுவாய்க்கும் சமயத்தில் சிரவணம் செய்யும்பே
து இஷ்டர்களுக்கு தீர்த்து மனதில் பற்றும்.)

ம. கெடுத்தாயென்று என்னை நீர் வெறுப்பதேன்? பயன
ற்ற உறவைப் பற்றுதலால் என்ன உண்டு. நீர் கூறியவா
றே அதை விட்டுவிட்டேன். இனியாவது நான் விஸ்
ராந்தியடைந்தேனு?

வி. அழிந்துபோகின்ற பொருள் செல்வமோ? பலவகைப்ப
ட்ட துன்பமல்லவா?

ம. முன்மனைவியாதி உறவுகளை நீர்விடச்சொல்ல உமது
சொற்படி விட்டேன்; இப்பொழுது இந்தப் பொருளை
யானும் வைத்துக்கொண்டு தவம் செய்வேனென்றால்
அதுவும் நாசமென்றும், அதனாலும் துன்பமுண்டென்
றும் சொல்லுகிறீர்; ஆனால், இன்பமாவதுஎது?

வி. அந்தப்பொருளைக் கைவிடுவதே சுகம், அதைக் கைப்ப
ற்றுவதேதுன்பம் என்றுஉண்மையாக அறிந்தாயில்லை?

ம. நல்லது, அந்தப்பொருளையும் விட்டு இரக்கச் சொல்லு
கிறீரோ?

வி. இதற்கு முன்பற்றுக்களாயுள்ளன யாவும் துன்பமென்
றறிந்து துறந்தவர்க்கு உன்னைப்போலும் கூர்ந்த புத்
தியில்லையா சொல்?

ம. சரிதான் ஒப்புக்கொள்ளுகிறேன். பொருளையும் விட்
டேன். இனி அந்தப்பொருளுக்கு மேலான பொருள்
எதுசொல்லும்?

வி. நெஞ்சே, இனி இப்பொருள்மேல் வைத்த பற்று நீங்
கிமேலாகிய சிவனது அருளையே பொருளென அடை
வோம்; அதை அடைந்தால் அவ்வருளே நமக்கு அரிய
செல்வமாகும்.

☞ (இப்பொருளால் இவ்வின்பம் வருதல்போல அவ்வரு
ளால் அவ்வின்பம் வருதலினால், அவ்வருளே அரியசெ
ல்வமுமாம் எனக் கூறினோம்.)

ம. இதுதானுமனதிற்கு இதம்?

வி. நெஞ்சே, இந்த, கஜ, துரகபதாதிகளாகிய நால் வகை
சேனையுஞ் சூழ்ந்துவர இப்பூவுலகு அரசாண்டு, அவ்வா
ழ்வோடும் அழிந்துபோகும் மன்னரின் பொய்வாழ்வை
இனிதென்று நீ கருதினையோ?

ம. நீர்மேற்கூறியவண்ணம் உறவையும், பொருளையும், வி
ட்டேன். இப்பொழுது இவ்வரசாது செல்வத்தையும்,
இவரை யாவரும் வணங்கும் இவரது பெருமையையும்
கண்டு அதிசயித்தமாத்திரமேயன்றி வேறில்லை. அத
ற்குநீர் இச்செல்வமும் பெருமையும் பொய்யென்றும்,
இவற்றை நீ விரும்பாதேயென்றும் கூறினீர்; ஆனால்,
இச்செல்வத்திற்கும் பெருமைக்கும் மேலாகிய மெய்ச்
செல்வமும் பெருமையும் எவை?

வி. அணுவளவாயினும் குறைவுபடாத பரிபூர்ணமாய் நின்
மலமாய் உள்ளசிவஞானச்செல்வத்தை ஒருவன் அடை
ந்தால், அவன் பாதத்தை வானகத்தோரும் வையகத்
தோரும் வந்து வணங்குவார்கள். ஆனதுபற்றி, மெய்
ச்செல்வமும் பெருமையும் இவையென்று அறி; அன்
றியும், இந்த பொய் வாழ்வு கண்டவுடன் முன்னர் பொ
ய் வாழ்வில் வீணாய்க்கழிந்த காலத்தை நினைந்து இத்த
னைகாலம் இவ்வின்பத்தைவிட்டு இருந்தோமென்று இ
ரங்கவும் வருமென ஆப்தர் நாலடியார், ஞானவாசிஷ்
டர், பட்டணத்துப்பிள்ளை முதலானோர் உரைத்தவாக்
கியங்களை அறிந்தாயில்லை போலும், அவர்கள் மொழிந்
தவாக்கியங்களைப் படித்தறி.

ம. அவர்கள் மொழிந்தது ஒன்றா? அல்ல. எத்தினையெத்தி
னையோ வாக்குகளை மொழிந்தார்கள். அவைகளில் எது
என்று அறிவேன். அவர்கள் மொழிந்த வாக்குகளை சற்
றுச்சொல்லும் பார்ப்போம்.

இன்னும்வரும் இஷ்டர்களேள்வந்தனம்
கோள்ளேகாலம்நேசன்

ப்பஞ்சபூதங்களாகவைத்துப் பொருள்செய்துவந்தால் அதிற்சொன்னகாரியம் அத்தனையும் வாஸ்தவம், வாஸ்தவம் என்று நாமும் மற்றெவரும் யோகத்திற்காணலாமே. அதுஅருமையான தாரகயோகத்திற்குக் கருவியாயிருத்தலாற்றான். அதை வியாசர் சொல்லவும் விநாயகர் எழுதினர். சாமானியமானால் அத்வைதசிரோன்மணிகள் அதைக் கவனிக்க நிமித்தமில்லை. விநாயகர்எழுதியபாரதப்புத்தகம்ஓலைப்புத்தகம். அது செல்லரித்தும் பழுதாயிற்று. சுபாவத்திற்கு விரோதமாக க்கிருஷ்ணன்நடந்ததுபொய்யென்கிறார்கள். கிறிஸ்து நாதர் நீர்மேல் நடந்தது சுபாவவிரோதமல்லவா? இந்தச்செய்கைகள் மகாபிரமாதமென்றெண்ணி, இந்தப்பிரமாதநடைகளைக் கிறிஸ்துசெய்ததாகச்சொல்ல அந்த மதஸ்தர்கள் ஆவென்றுதிறந்தவாயில் ஈ நுழைந்தும் தெரியாது கேட்டுமகிழ்கிறார்கள். ஐயோ! அதிசயமே! இவ்விதபலஅதிசயங்களை நம்மவர்கள் இந்தப் பரதகண்டத்திற் செய்து அதிசயங் காட்டவில்லையா? நமதுதிருவள்ளுவநாயனர் கொங்கணவன் அகங்காரம்அடங்கக் குன்று ஒன்றைப்பத்தரைமாற்றுத் தங்கமாகச்செய்யவில்லையா? இதுகதையாதலால் அபத்தமென்று எவரேனும் இந்தச்சமயத்திற் சொல்ல வாயெடுத்தால். கிறிஸ்துசெய்ததும் கதைதானே என்று சொல்ல நமக்கு வாய்நோவதுண்டோ? பன்னிரண்டு ஆண்டளவும் சாயாபுருஷனைக்கண்டு சாதித்துவந்தவன் நினைத்தஅந்தக்ஷணமே காசிபோகலாகாதா? இவ்விதயோகம்பொய்யென்று எவரும்வாயெடுக்கவிட்டோம். சாயாபுருஷயோகத்தை நாமே மூன்று வருஷகாலம் செய்துசாதித்தோம். பிறகிட்டுவந்துற்ற கெடுதியால் அதைச்செய்யச்சாத்தியமற்று விட்டோம். செய்தவரையில் பலனுண்டென்று ஐயர்திரிபறக்கண்டோம். இவன் ப்ரம்மஞானிபாவானு? அப்படியேகினாலது அணிமா சித்திகொண்டு வேடிக்கைசெய்திருக்கலாம். அவர்தத்துவஞானியானால்தத்துவத்தை வெளியிட்டிருப்பார். மகத்தான கடவுளின் மகனானால் பிரஜைகளுக்குத் தமதுஇயற்கையாகிய தத்துவத்தைப்போதித்திருப்பார்கிறிஸ்துவேதத்தைத்திருப்பித்திருப்பிஅட்டையுங்கூட ஓடித்து உள்ளும் புறம்பும்பார்த்தோம். தத்துவப்பாதனை ஒன்றும் காணக்கிட்டவில்லை. குலமக்களே! யோகம் முதலிய மேலான கருமத்தினாலுங்கூடமோக்ஷம்உண்டாகாது. தத்துவவிசாரணைசெய்து தன்னைத்தான்கண்டுணர்ந்தால் மாத்திரம் பிறவிநீங்கி மோக்ஷமுண்டாகும். யோகமுதலிய கருமங்களினாற் சுக ஜனனங்கள் கிட்டும். கிட்டினாலும் என்ன? குறித்தகாலங்கழிந்தபின் மறுபடி வேறு பிறவிவந்துவிடும். கிறிஸ்தவன் மறு பிறவியில்லையெனக்கங்கணம்கட்டிவாயடித்துப் பேசுவான். சொற்பனத்திற் காணுமவைகள் சென்றஜனனத்தின் கருமத்தைச்சித்தம் இவன் அறியும் வண்ணம் கொண்டுவந்துவிடுகிறதென்றுஅறியான். முதலாவது மனதிற்கும் சித்தத்திற்கும் உள்ள பேதத்தை அவன் அறிந்தாலல்லவா சொற்பனத்திற் காணுமவைகள் இன்னவை என்று திட்டடுவான். ஐயோ! ஒன்று சொல்லுகிறோம், இஷ்டர்களே கேண்மின். ஆதரவற்றுக்கிளிபோல நபேச்சுக்கற்றுப்பேசும்கிறிஸ்து போதகர் முன்னே நாம் சட்டையுடன் நின்றதே பெருத்ததப்பிதம். நின்றபின் அவர்கள்மீது நாம் முகத்தில்தீபறக்கப் பேசுவது அதினும்பிசகு ஏனெனில், அவர்களுடையசாஸ்திரகர்த்தாக்கள் தத்துவத்தைப்பிடித்து நின்றுபேசாதபோது போதகர்கள் தம்குருவைப்போற்றுனே பேசுவார்கள். அவர்களுக்குத்தெரிந்தது அம்மட்டுத்தான். தத்துவத்தை எடுத்துப்பேச முயலுவோமானால் அவர்கள் இவை பதர் பேச்சென்று வாயடிப்பார்கள். அவர்களுக்குச் சொப்பனத்திலும் தெரியாதவைகளைப்பற்றி அவர்கள் பேசுவதெப்படி? திருஷ்டாந்தம் ஒன்றுண்டு. அங்கிலையபாஷையில்பௌத்தனுடையசரித்திரமுண்டு. அதிலப்பௌத்தன் ஒரு மரநிழலில் யோகம்சாதித்து நின்றானென்றதற்குப்பதிலாக மரத்தடியில்அவன் தீர்க்காலோசனைசெய்தானென்று எழுதியிருக்கிறது- இதையோசிக்கும்போது யோகம் இன்னதென்றே அறியாதகிறிஸ்தவர்கள் தாரகயோகத்தில் அமர்ந்தமைந்த ஒருத்தி பக்குவத்தைக்கெடுக்கவந்து நின்றாளென்று சொல்வோமானால் அவர்கள் அதை இன்னது இனியதென்று அறிவார்களா? இல்லை, இல்லை- தத்துவத்தை அறிந்துவந்து பேசுவார்களானால் மட்டும் நாம் பேசலாம். மற்றப்படி அவர்கள் முன்னே பேசஎன்னநிமித்தம்? அவர்கள் தத்துவத்தை அறிந்தார்களானால் அந்தக்ஷணமேதம் மதத்தை விட்டு, நம்தத்துவஞானிகாலில் சாஷ்டாங்கமாக விழுந்து, இதுகாலம் நாம் பிதற்றிய அஞ்ஞானத்தைப்போக்கி, நான் யாரென்றறிய உபதேசிக்க வேண்டுமென அவாக்கொண்டுகைகட்டிநிற்பான்- இதுதிண்ணம்- நாமறிந்தமட்டில் ஆணையிட்டுச்சொல்லுமிடத்தில் மோக்ஷம் வேணுமென்கிறவனுக்கு அத்துவைதத்தைவிட வேறுவழியில்லை- அது ஆய்ந்தறிந்தால் மிகச் சமீபத்துள்ளது- அந்தஅத்துவைதவழியாகியதாரகயோகத்தில்கூடஸ்தபிரமம் வரையில் நமது செயல். பிறகிட்டுப் ப்ரம்மத்தைச்சேர்ந்ததாகும்- ஐயா! தாரகயோகப்பிரபுக்களே! நாம் சொல்வதில் ஏதேனும் அபத்தமுண்டா? இல்லையே! ஆபாசங்களை நிறுத்த மனம் நிற்கும்- மனம் நிற்கவேண்டுவாயுநின்று யோகசித்தியுண்டாகும்-வாயுவின் அம்சத்தில் அறிவினின்று பிறந்தமனதுஒடுங்குமானால், அது தன்சுயரூபமான அறிவாகுமென்று நாம் சொல்லநிமித்தமில்லை- மனம் கெடவே, நினைவு அற்று அறியுந்தன்மையொன்றே மிஞ்சும்- அந்தச்சுபாவத்திலும் நான் எனும் அகங்காரம்பற்றி நிற்கும்- (திருஷ்டாந்தம்- நினைவொன்று நினையாமல் நிற்கின் அகமென்பார்என்னும்பாட்டு, தாயுமானவர்-) அதையுநீக்கினால் அவ்விடத்தில் பிதாவைக்காணலாம்- வேறாகக்கண்டபிதாவே தானாவது. தான், அத்துவைதம். இதைக்கேட்ட அத்துவைத அப்பியாசிகள் நம்மீது ஆசைகொண்டு முத்தமிடுவார்கள். கடைமொழியை அயற்பாகச்சொன்னோம்- தெரிந்தவர்கள் அறியட்டும்- ஏனையவர் நாம் பித்துப்பிடித்தவனென்று அவமதிக்கட்டும்- இரண்டும் நமக்கிஷ்டமே- இந்தவிளையாட்டிலிருப்பதே நமக்கு அத்தியந்த இஷ்டம்- கண்ணாரக்கண்டுகளித்து ஆனந்தமயமாகியிருக்கும் யோகிக்கு கிறிஸ்தவனானாலுஞ்சரி, அண்டபிண்டாண்டங்களைத்தலைகீழாகப்புரட்டும் எவனானாலுஞ்சரி, வர்துஜால வித்தைகளும், புரோகித ஜாலங்களும் பேசுனாலும் தான் கண்டு அடைந்தசுகத்தைவிட்டுஅந்தப்புரோகிதஜாலன் வசப்படுவதுண்டோ? இல்லை, இல்லை- ஆகவே, கிறிஸ்தவன் ஏதேதுபேசினும் விவேகமுள்ள மனுகுலத்தான் எவனும் அம்மதமேறவில்லை- வயிற்றுச்சோற்றுக்குவருவழியற்ற பேதை அதில் சேர்ந்துகண்டோம்கண்டோமெனப் பறைசாற்றியதில் பயன்ஏது? இதற்கு மூக்கறுத்தவன்கதைதான் திருஷ்டாந்தம். இதைத்தொட்டு இன்னம் அதிகம்பேச அவகாசமில்லை- ஆதலால் அம்மட்டில்விடுவோம்- இஷடர்களே வந்தனம்.

சொள்ளேசாலம் நேசன்.

இஷ்டர்களுக்கு அறிக்கை.

நாம் இந்தப் ப்ரம்மவித்தியா பத்திரிகையில் "ஒருதரம்" தோன்றியும் பிறகிட்டு இதுகாறும் பௌனம் சாதித்திருந்ததைத்தொட்டு பத்திராதிபர் அடிக்கொருமுறை கவனித்து வந்ததை நாமறியாது போகவில்லை. அதிற்கிருந்து சிலமுக்கிய காரணத்தினால் அப்படிச் சோம்பிக்கிரியநேரிட்டது. இடையில் நமது தேகத்திற் பீடை ரோகங்கள் பற்றி, மெத்தவருத்தியது. அதுவொழிந்து நாம் தலையெடுக்க எத்தனிக்கவும் நமது பதல்விகருக்குப் பெரிய அம்மைகண்டு எமவாதனைப்படுத்தியது. படுத்தபடுக்கையினின்று பாலகிக்குள எழுந்திருக்க ஆகவில்லை. அன்னந்தண்ணீரில்லை. நாமோ இந்நாட்டில் பரதேசி. நமக்குச் சகாயம்செய்வாரில்லை திக்கற்றவர்க்குத் துணைநிற்கும் மகத்தானகடவுளை த்துத்தியம் பண்ணிய வண்ணமாயிருந்தோம். இதுஒருவிசனமல்ல. ஐந்துருபாய்நட்டணமாக உயர்ந்த [சுதேசமித்திரன்] கிடைத்தாக எட்டிப்பக்கத்திலிருந்து நான்காகக்குறுகியதே பெரியவிசனமாக மனமுற மருகி நின்றோம். நாம் ஆதியில், தினவர்த்தமானியிற்றோன்றிவந்தோம். அந்தப்பத்திராதிபர் நம்மைத்தம் பத்திரிகைக்கு ஒருஅங்கமாகப்பாவித்துவந்தனால், அந்தச்சஞ்சிகையை நம்மிஷ்டப்படி சீர்திருத்திப் பிரஜைகள் எவருந்தன்மட்டில் வாஞ்சையடையுமாறு செய்தோம். அதுசர்க்காரார் கொடுத்துவந்த கட்டணத்தை நிறுத்தியதால், பிரேதலோகம் சேர நேர்ந்தது. அது அகாலமரணமடையவும் நமக்கு வந்தமனவெறுப்பின் மிகுதியால், நாம்புத்திவசம் தப்பி ஒருவருடகாலம் மருள்பிடித்தவன் போலப்பிதற்றியறிவழிந்திருந்தோம். ஈசுரன் நாம்படுந்துன்பத்தைப்பார்க்கச்சகியாமல்சுதேசமித்திரனை நம் எதிரேகொண்டுவந்துவிட்டார். விட்டதை நழுவவிடாமல் அதன்மூலமாகப்பற்பல விடயங்களை ஓயாது எழுதிவந்தோம். அப்படி எழுதியவிடயங்கள் பலவற்றையும் புத்தகரூபமாக்கியிருந்தால், ஒருபெரிய புத்தகமாகிவிடும். இடையில் வந்துசேர்ந்தஇட்டர்கள் காலக்கிரமத்தில் மெல்ல மெல்ல நழுவினர்வள். நாமப்படி நழுவமாட்டோமென்று உறுதிவசனமும் அதேபத்திரிகையில் அச்சிட்டோம் அதைக்கண்ட பத்திராதிபரும் மனக்கிளர்ச்சி யடைந்திருக்கலாம். இருந்தாலுமென்ன; அதன்கர்த்தர்கள் மட்டில் வஞ்சனையேதுமில்லை. எவரோவிகிதர் ஒருவர் நூதனமாகஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றது. அவரால்தான் நமக்கு அத்தியந்த விசனமுண்டாக நேர்ந்தது. உண்டானவிசனத்தை பிறகிட்டுசமயமறிந்து வெளியிடுவோம். அப்படிவிசனப்படுவது நாம்மாத்திரமல்ல; எட்டுத்திக்கிலுமிருந்து அதைத்தொட்டு அந்தரங்க கடிதங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. அது வேறொருபிரமாதமல்ல. சஞ்சிகை 4 டக்கமாகக்குறைந்ததைத்தொட்டும், விகிதர் வரும்விடயங்களை அச்சிடாமலலக்ஷியம் செய்வதைத் தொட்டுந்தான். ஆனாலும், இதைத்தொட்டுப் பத்திராதிபதிக்கெழுதியும் அதுஅவர்வசஞ் சேரவில்லைப்போலும். சேராவிடினுமென்ன; நாமிந்தவிடுமுறையில், அகத்தியஞ்சென்னைக்குச்சென்று பத்திராதிபர்களுடன்நேருக்குநேரே பேசிக்காரியசித்திசெய்துகொண்டுவருவோமானதினால், இட்டர்கள்தன்மட்டில் விசனப்படநிமித்தமில்லை. இவ்விதசஞ்சலங்கள் நமது நெஞ்சிற்குடிகொண்டதினாலும், ஜீவனாதாரத்தொழில்மிஞ்சியதினாலும் நாமிப்பத்திரிகையில்வந்துதோன்றச்சற்றுத்தடையடைந்ததன்றி, மற்றப்படியல்ல. நாமிந்தப்பத்திரிகையில் முன்சொல்லிவந்த சங்கதியை சூட்சமத்தில் முடித்து ப்ரம்மசந்நிதானத்தில்மாயையின்கோலங்கள் நடந்ததையும், அவையொடுங்கி பிரம்ம மயமாவதையும் நீளநினைந்துபேசுவோம். அப்படிப்பேசுமவைகளை, இட்டர்கள் விவேகம் சூழ்ந்து படித்தறிவார்களானால், சுகிருதமுண்டு. இடையில்வாதானுவாதங்கள் செய்யப்புறப்படுவார்களானால், பிறகிட்டு வரிசைக்கிரமத்திற் பேசவேண்டியவைகள் முன்னேதோன்றி வரிசைக்கிரமந்தப்பி மாறுபடும். இதனாலதனபிமானஇட்டர்கள்நெஞ்சஞ்சலிப்புறும். சலிப்புற்றாலாசையோடுபற்றிய கவனம் மெல்ல மெல்ல நழுவிப்போகும். இதனால்பிடித்தகடைப்பிடி அற்றுப்போய், வைராக்கியம்வழுவி விவேகம் குன்றும்.

இஷ்டர்களேவந்தனம்

கொள்ளேகாலம் நேசன்.

சிதம்பரம்
ப்ரம்மவித்தியா யந்திரசாலையில்
விற்கப்படும் புத்தகங்கள்.

சர்மிஷ்டாவிஜயம்.	,,	௫	,,
பகவத்கீதார்த்த தீபிகை.	௪	,,	,,
ஆச்சரிய தர்ப்பணம்.	க	௮	,,
அஷ்டாங்கயோகம்.	,,	௰	,,
ஆரியாதண்டகம். லக்ஷிமிஸ்தோத்திரம். }	,,	க	,,
மகேஸ்வரதண்டகம்	,,	க	,,
சங்கர சரித்திரம்.	,,	,,	௫
ஆத்மாவும், சரீரமும்.	,,	க	,,
சகாதேவசாஸ்திரம்.	,,	க	,,
மனுமுறைகண்டவாசகம்.	,,	௪	,,
மாதர்நீதி.	,,	௫	,,

சர்வஜித்து வருஷத்திய
ரிப்பன் பாக்கெட்பஞ்சாங்கம்

இது பார்த்திபவருஷ முதல் பிரசுரமாகி, நிகழும் சர்வஜித்துவருஷமும் வெளிப்படுத்தப்பட்டது. இவ்விந்து தேசத்திற்கு அநேகநன்மை செய்து ஜனங்களாற்புகழப்பட்ட மாஜி கவர்னர் ஜனரலான லார்ட் ரிப்பன்பிரபுவின் நன்றி அறிதலுக்கு அறிகுறியாக, சீமையிலிருந்து தருவிக்கப்பட்ட அவர் பிரதிபிம்பத்துடன் அவர் பேரால் அச்சிடப்பட்டு வருகின்றது. இதில் வைதிக லௌகிகங்களுக்குரிய அநேக விஷயங்களிருப்பதால்யாவர்க்குமே ஆவசியகமானது. தேசாபிமானிகளான நமது இந்து நண்பர்கள், "நல்லாரைக்காண்பதுவும் நன்றே" என்றபடி அப்புருஷோத்தமனாதினமும் பல்கால் காணுவதற்குதவாயும், நன்றியறிதலுக்குக் காரணமாயும் இராநின்ற இப்பஞ்சாங்கத்தை, வருஷந்தோறும் பரிபாலித்து வருவதோடு, தங்கள் தங்கள் நண்பர்களையும் பரிபாலிக்கச்செய்யப் பிரார்த்திக்கின்றனம். அழகான சீமைப் பென்சலும் கொடுக்கப்படும். பிரதி விலை அணா 6. தபால்சார்ஜ் அணா 1 10க்கு 1 ம், 25க்கு 3 ம், 50 க்கு 7 ம், 100க்கு 14ம் கமிஷனுக மேலே கொடுக்கப்படும்.

இந்த ஏற்பாடு வாங்கி விற்பவர்க்காக ஏற்படுத்தியது

அச்சிட்டிருக்கும் புத்தகங்கள்.

மாதர் நீதி-க்கு அணா 6. தபால்சார்ஜ் அணா க. மனுமுறைகண்டவாசகம் க்கு அணா 4. தபால் சார்ஜ் அணா அரை இது சிதம்பரம் இராமலிங்கசுவாமிகளால் எளிய வசன நடையில் இயற்றியது. (இது சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரிடமும் கிடைக்கும்)

வேண்டியவர்கள் சென்னை முத்தியாலுபேட்டைத் தம்புசெட்டிவீதி 30-வது நெ. மதராஸ் ரிப்பன்பிரஸ் மானேஜர் கு. சடையாண்டிச் செட்டியார் பேருக்குப் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். பதில்வேண்டுவோர் அரை அணாலேபில் அனுப்பவேண்டும்.

கு. சடையாண்டிசெட்டியார், மானேஜர்.